வாலிபத்தின் கேள்விகள்



J.J. குருசிங்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

வாலிபத்தின் கேள்விகள்?

J.J. குருசிங்

Contact Address :

EVT: J.J. GURUSINGH

129, Mizpah Nivas

Near C.S.I New Church,

Tuckkarammalpuram, Perumalpuram (P.o)

Tirunelveli - 627 007. S.INDIA

CELL : 9443373026

முதல் பதிப்பு	:	1995 நவம்பர்
இரண்டாம் பதிப்பு	:	1999 பெப்ரவரி
மூன்றாம் பதிப்பு	:	2001 ஜனவரி
நான்காம் பதிப்பு	:	2003 மார்ச்
ஐந்தாம் பதிப்பு	:	2004 ஆகஸ்ட்
ஆறாம் பதிப்பு	:	2005 மார்ச்
ஏழாம் பதிப்பு	:	2006 ஆகஸ்ட்
எட்டாம் பதிப்பு	:	2008 மார்ச்
ஒன்பதாம் பதிப்பு	:	2009 செப்டம்பர்
பத்தாம் பதிப்பு	:	2012 மார்ச்
பதினோராம் பதிப்பு	:	2014 ஜூன்

நூல் வரிசை : 20

சமர்ப்பணம்!

சிலுவை சுமந்த சீயோன் வீரரே!

சிந்தையில் நிறைந்த மகிமையின் தெய்வமே!

வறண்ட பாலைவனமாய்

வாடிய என் வாலிபத்தை;

வசந்த மலர்த்தோட்டமாய்

வடித்து பூரிக்கச் செய்தவரே!

வறட்சி தாக்கினாலும்

வாடாது வாழ வைக்கிறவரே!

நின் மகிமைக்கு இந்நூல்

சமர்ப்பணம்!!!

(J.J. குருசிங்)

சாயர்புரம்

ஆசிரியர் உரை...

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த முப்பது ஆண்டுகளாக ஏராளமான வாலிபர் கூட்டங்களில் செய்தி கொடுத்திருக்கிறேன். வாலிபர் பலரும் என்னிடம் கேட்ட கேள்விகள் சிலவற்றை தெரிந் தெடுத்து இப்புத்தகத்தின் வாயிலாகப் பதிலளித்துள்ளேன்.

இப்புத்தகத்தின் முதல் பத்து பதிப்புகள் வேகமாக தீர்ந்து விட்டபடியாலும், மேலும் பலர் இப்புத்தகத்தை விரும்பிக் கேட்டு எழுதுவதாலும் இந்த பதினோராம் பதிப்பு வெளிவருகிறது.

இப்புத்தகத்தை வெளியிடும் செலவை டக்கரம்மாள்புரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் ஏற்றுக் கொண்டார்கள். சங்கீதம் 29:11-ன் படி ஆண்டவர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

இப்புத்தகத்தை வாசியுங்கள். மற்றவர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள். ஆயிரக்கணக்கானோருக்கு ஆசீர்வாதமாயிருக்கும் எமது புத்தக ஊழியத்தை உங்கள் ஜெபத்தாலும், பொருளாலும் தவறாது தாங்குங்கள்.

தேவகிருபை

ஆளக்கடவது.

வாலிபத்தின் கேள்விகள்?

பொருளடக்கம்		பக்கம்
1.	இரட்சிப்பு - அது எப்படி?	5
2.	அனைத்தையும் அறிக்கையிட முடியுமா?	9
3.	இரட்சிப்பின் நிச்சயம்	13
4.	இரட்சிப்பை பெறாவிட்டால் என்ன?	19
5.	வளர்வது எப்படி?	24
6.	நண்பர்கள் யார்?	29
7.	வீட்டிலே போராட்டம்	33
8.	தாழ்வு மனப்பான்மையா?	40
9.	காதலிக்கலாமா?	45
10.	தவறான சிந்தனையா?	51
11.	இச்சை படுத்தும் பாடு . . .	56

1. இரட்சிப்பு - அது எப்படி?

இரட்சிப்பு என்றால் என்ன? நான் அதைப் பெறுவதற்கு எந்தக் கூட்டத்துக்குப் போக வேண்டும்?

நீந்தத் தெரியாத ஒருவன் தண்ணீரில் விழுந்து விட்டான். தத்தளிக்கும் அவன் அதிசயமாக காப்பாற்றப் பட்டுவிட்டால் எப்படி இருக்கும்? அது போல் தான் இரட்சிப்பு என்பது?

ஏராளமாக கடன்பட்ட ஒருவன் கடன் பாரத்தினால் கலங்கி அதைத் தீர்க்கவும் முடியாமல் அவமானப்படும் போது அவன் கடனை ஒருவர் தாமாகவே முன் வந்து தீர்த்து வைத்தால் எப்படி இருக்கும்? இது போன்றது தான் இரட்சிப்பு என்பது.

ஒருவன் மரண தண்டனைக்கு உட்படுத்தப் பட்டான். திடீரென்று, ஒருவர் அவன் மரிக்க வேண்டிய இடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்து அவனை உயிர் பிழைக்க வைக்கிறார். இது தான் இரட்சிப்பு என்பது.

உலகில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் பாவக்கடலில் தத்தளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பாவம் அவர்களைக் கடன்காரனைப் போல் மனப்பாரத்தில் அழுத்தி விடுகிறது. பாவத்தில் வாழும் மனிதனுக்குத் தேவன் ஒரு நியாயத் தீர்ப்பையும் நியமித்திருக்கிறார். இதனையே பாவத்தின் சம்பளம் மரணம் என வேதம் திட்டவட்டமாகக் கூறுகிறது. (ரோ. 6:23)

இரட்சிப்பு என்பது, மனிதனின் தத்தளிப்புக்கும், மனப்போராட்டத்திற்கும், மரண ஆக்கினைக்கும் காரணமான பாவத்திலிருந்து மனிதன் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதே ஆகும். எனவே தான் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு என வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. (லூக்கா 1:77)

இந்தப்பாவம் எப்படி மன்னிக்கப்படும்?

ஒரு நாட்டில் ஒரு வினோத வழக்கமுண்டு. வருடக் கடைசி நாளன்று தாங்கள் செய்த பாவங்களையெல்லாம் ஒரு தாளில் எழுதுவார்கள். பின்னர் அதை ஒரு பட்டமாக செய்து வானில் பறக்க விடுவார்கள். அது உயரமாகப் பறந்து போன பின்பு நூலை அறுத்து விட்டு தங்கள் பாவம் போய்விட்டது எனக் கூறிக் கொள்வார்கள். இப்படி பாவமன்னிப்புப் பெற பல தவறான நம்பிக்கைகள் உலகெங்கிலும் உண்டு.

ஆனால் சரியான வழியை வேதாகமம் மட்டும் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. “நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப் படுவான்” என இயேசு கூறியுள்ளார் (யோவான் 10:9)

“இரட்சிக்கப்பட எந்தக் கூட்டத்துக்குப் போக வேண்டும்?” என நீ கேட்டுள்ளாய். இன்று ஏதாவது ஒரு கூட்டத்திலே போய்ச் சேர்ந்து கொண்டால் இரட்சிக்கப் பட்டாயிற்று என்று அநேகர் நினைக்கிறார்கள். கூட்டங் களுக்குச் செல்வதில் தவறில்லை. ஆனால் இரட்சிப்பை அருளுகிறவர் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து மட்டுமே.

அதை நீ பெறுவதற்கு என்ன வழியென்றால் உன் பாவ நிலையைக் குறித்து முதலில் நீ உணர்ந்தாக வேண்டும். அதை ஒத்துக் கொண்டு நமது பாவநிலையை ஆண்டவரிடத்தில் அறிக்கையிட வேண்டும். ஒரு மருத்துவரிடம் போய் நின்று கொண்டு உன் வியாதியை நீ அவரிடம் சொல்லாமல் இருந்தால் அவர் உனக்குச் சிகிச்சை அளிப்பதில் தடங்கல் ஏற்படும். ஒரு வக்கீலிடம் போய் நமது பிரச்சனைகளைச் சொல்லாவிட்டால் அவர் நமக்காக வழக்காட முடியாது. ஆண்டவரிடமும், நமது பாவசுபாவத்தை உணர்ந்து, அவர் அதை நீக்க முடியும் என்ற விசுவாசத்தோடு அவற்றை அறிக்கையிட வேண்டும்.

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9)

உன் பாவ நிலையை ஒத்துக்கொண்டு உன் பாவங்களுக்காக அந்த இயேசு மரித்து உயிர்த்தெழுந்தார் என்பதை நீ விசுவாசத்தோடு அறிக்கையிடுவது மட்டுமல்ல அவரை உன் உள்ளத்திலே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர் களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." என்று யோவான் 1:12ல் குறிப்பிட்டுள்ளதை நினைத்துக்கொள்.

இயேசுவை உள்ளத்திலே கூப்பிடும் போது, அவர் வருவேன் என வாக்களித்துள்ளார் (வெளி. 3:20)

ஒரு பிரதமரோ, பெரிய புகழ்பெற்ற ஒருவரோ உன் வீட்டுக்கு வந்தால் அவரை வீட்டு வாசலிலேயே நிறுத்தி பேசி அனுப்பி விடுவாயா? நிச்சயமாக அப்படிச் செய்ய மாட்டாய். அவரை வீட்டுக்குள்ளே அழைத்து அமரச் செய்து கனப்படுத்துவாய் அல்லவா? சிந்தித்துப்பார். எத்தனை ஆண்டுகளாய் அவரை உன் இதயத்துக்கு வெளியே நிறுத்தியிருக்கிறாய்? அவர் உன் இதயத்தினுள்ளே வந்து வாசம் பண்ண விரும்புகிறார். உன் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பி அவர் உனக்காக மரித்தார் என்பதை அறிக்கையிட்டு, அவரை உன் உள்ளத்திலே கூப்பிடு.

நீ இரட்சிப்பைப் பெறுவாய்!

இயேசு சொல்கிறார், "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை."

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெனி : ஜெடி, இன்னைக்கு கூட்டத்திலே எல்லாமே நல்லா இருந்திச்சு. ஆனா ஒரே ஒரு காரியம் புரியல. அந்த ஒன்ன உன்னிடம் கேட்கட்டுமா ஜெடி.

ஜெடி : என்ன ஜெனி நீ கேட்டா பதில் சொல்லாம இருப்பேனா? தாராளமா கேளு.

ஜெனி : பிரசங்கம் பண்ணின அக்கா, உன் இதயக்கதவை இயேசு தட்டிக் கிட்டே இருக்கார் அப்படீன்னாங்களே அது எப்படி?

ஜெடி : ஓ அதுவா? பாரு அடிக்கடி நம்ம உள்ளத்தில் நாம் இயேசுவின் பிள்ளையா மாறனும், பாவ வழியெல்லாம் விட்டுட்டு திரும்பனும் அப்படீன்னு ஆசையும், உணர்வும் ஏற்படுவதில்லையா. இப்படிப்பட்ட உள்ளுணர்வின் மூலம் ஆண்டவர் நம் இதயக் கதவை தட்டுகிறார்.

நாம் இயேசுவை உள்ளத்திலே கூப்பிடும் போது அவர் நம் உள்ளத்திலே வருகிறார்.

ஜெனி : ஜெடி இப்படிப்பட்ட உணர்வு எனக்கு பல வருடங்களாக ஏற்படுது. ஆனா நான் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாம இதயத்துக்கு வெளியேயே நிறுத்திட்டேன். நீ சொன்னது நல்லா புரிஞ்சுது ஜெடி நான் இன்னைக்கு இயேசுவை என் உள்ளத்தில் கூப்பிடப்போகிறேன்.

ஜெடி : ரொம்ப நல்லது. பாவத்தை விட்டு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டு வாழ்வது தான் வாழ்க்கை. மற்றதெல்லாம் ஆகாயத்தில் அடிக்கிற சிலம்பம் தான். நானும் உனக்காக ஜெபிக்கிறேன்.

2. அனைத்தையும் அறிக்கையிட முடியுமா?

கடந்த வாரம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன். அவரை நான் ஏற்றுக்கொள்ளும் போது நினைவுக்கு வந்த எனது பாவங்களை அறிக்கையிட்டேன். ஆனால் அறிக்கையிடாத பாவங்கள் ஏதும் எனக்குள் இருக்குமோ என்ற பயம் எனக்கு வருகிறது. நான் என்ன செய்வது?

இதே குழப்பம் இரட்சிக்கப்பட்ட புதிதில் அநேகருக்கு வருகிறது. சில காரியங்களை இவ்விஷயத்தில் புரிந்து கொள்வது அவசியம்.

ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதோரை வேதம் பாவிகளின் கூட்டம் என்று வரையறுக்கிறது. சிலர் கூறலாம், நான் பாவமே செய்ததில்லை. இன்னும் சிலர் கூறலாம். நான் மற்ற துன்மார்க்கர் போலில்லை. சன்மார்க்கமான காரியங்களில் ஈடுபடுகின்றேனே என்று. யாராயிருந்தாலும் இயேசுக் கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாதோர் பாவிகளாகவே இருக்கிறார்கள். கீழ்க்கண்ட வசனங்களைப் பார்ப்போம்.

- பாவம் செய்யாத மனுஷன் இல்லையே. (1 இரா.8:46)
- நாம் எல்லோரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களானோம். (ரோமர் 3:22)
- என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். (சங்.51:5)

ஒரு ஆப்பிள் மரத்தை எடுத்துக்கொள்வோம். அது ஆப்பிள் பழம் கொடுப்பதினாலே ஆப்பிள் மரம் என்று பெயர் பெறவில்லை. அது ஆப்பிள் மரமாயிருப்பதாலே தான் அது ஆப்பிள் பழம் கொடுக்கிறது. காய்க்காத ஆப்பிள் மரங்களும் இருக்கலாமே.

ஒரு நாயை எடுத்துக்கொள்வோம். அது குரைக்கிறது. அது குரைப்பதால் தான் நாயா? இல்லை அது நாயாக இருப்பதால் தான் குரைக்கிறது. குரைக்காத நாயுமுண்டே.

நாம் பாவம் செய்ததினாலே பாவிகள் அல்ல. பாவியாகவே இருப்பதினால் பாவம் செய்கிறோம். துணிகரமான பாவங்களில் நாம் ஈடுபடாமல் இருந்திருக்கலாம். ஆனால் நாம் பாவ சுபாவத்துக்குள் இருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

நாம் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது நமது பாவியாயிருக்கும் நிலைமையை, நமது பாவ சுபாவத்தை அறிக்கையிடுவதே மிக முக்கியமானதாகும்.

இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு என ரோ. 10:9-ல் எழுதப்பட்டுள்ளது.

நமது பாவங்களை உணருகிற நாம் அதைத் தீர்க்கிற அதற்காக பரிகாரம் செய்த இயேசுவை, எனக்காக மரித்தார், எனக்காக உயிர்த்தார். அவரே என் பாவத்தைப் போக்கி இரட்சிக்கிற ஆண்டவர் என அறிக்கையிட ரோமர் 10:9 சொல்கிறது.

(யோவான் 1:9ல் குறிப்பிட்டுள்ள பாவ அறிக்கை, நாம் இரட்சிக்கப்பட்டபின் ஏதாவது காரணத்தால் தவறு வோமானால் செய்ய வேண்டிய அறிக்கையாகும்.)

இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் ஆவியானவர் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்ளத் தூண்டி விடுகிறார். இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததினால் தானே நாம் பாவம் செய்து கொண்டிருந்தோம். எனவே இயேசுவை உள்ளத்திலே ஆண்டவர் என விசுவாசித்து அறிக்கையிடுவது மிகவும் அவசியமானதாகும்.

அப்படியானால் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது ஒவ்வொரு பாவங்களாக அறிக்கையிடக்கூடாதா? எனக் கேள்வி எழுப்பலாம். அதில் தவறில்லை. ஆனால் மிக அவசியமான அறிக்கையை மேலே குறிப்பிட்டுள்ளேன். மட்டுமல்ல நாம் இது நாள் வரை செய்துள்ள பாவங்கள் எல்லாம் நினைவிலிருக்குமா என்பதும் கேள்விக்குறிதானே.

உதாரணமாக ஒருவன் 20 வயதில் இயேசுவை ஏற்றுக் கொள்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் எட்டு வயதிலிருந்து செய்யும் பாவங்களைக் கணக்கிடுவோம். ஒரு நாளைக்கு ஒரு பாவம் என கணக்கெடுத்தால் (குறைந்த பட்ச கணக்கு) வருடத்திற்கு 365 பாவங்கள் செய்கிறான். அவன் இருபது வயதாகும் போது 4380 பாவங்கள் செய்திருப்பான். 4380 பாவங்களையும் நினைவில் வைத்து அறிக்கையிடக் கூடியதா என்பது பெரும் கேள்வி.

நான் செய்த அத்தனை பாவங்களும் படம் போல் என் முன் வந்தன என சிலர் கூறுவதுண்டு. நமது பாவசுபாவத்தின் விளைவாக எவ்வளவு தூரம் நாம் தவறிப் போயிருக்கிறோம் என்பதைக் காட்ட பல பாவங்கள் நமக்கு முன் நிழலிடலாம், இயல்புதான்.

ஆனால் எல்லாப் பாவங்களையும் நான் அறிக்கை யிட்டேனா? அறிக்கையிடாத பாவங்களை ஆண்டவர் மன்னித்திருப்பாரா என்று கலங்கி நிற்க வேண்டிய அவசியமில்லை. நாம் எப்பொழுது நமது பாவசுபாவத்துக்காக மனம் வருந்தி மனந்திரும்பி விசுவாசத்தோடு அறிக்கையிட்டு அவரை ஏற்றுக்கொண்டோமா அப்பொழுதே அவர் எல்லா பாவங்களையும் நம்மை விட்டு நீக்கிப் போட்டார். அல்லேலூயா! நாம் புதுசிருஷ்டி என வேதாகமம் திட்டவட்டமாகச் சொல்கிறது (2 கொரி. 5:17)

இன்னொரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஓர் ஆறு. அதில் ஒரு அணை கட்டப்பட்டிருந்தது. அணையை அடைத்து வைத்திருந்த பொழுது ஆறு செல்லும் பாதையில் தண்ணீர் வரவில்லை. ஆங்காங்கே குழி தோண்டி தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப் பல குழிகள் தோண்டி ஆற்றுப் பாதையில் ஏராளமான குழிகள் ஆகிவிட்டன. திடீரென ஒரு நாள் அணை திறக்கப்பட்டது. புறப்பட்டு வந்த தண்ணீர் ஆற்றுப் பாதையிலிருந்த மணல் குழிகளை மூடிக் கொண்டு பாய்ந்து சென்றது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார். ஐம்பது குழிகள் மூடப்பட்டிருக்கும். மற்றொருவர் சொன்னார், இல்லை 60 குழிகள் மூடப்பட்டிருக்கும். ஆனால் உண்மை என்ன தெரியுமா? ஆற்றுப்போக்கிலிருந்த எல்லா குழிகளும் மூடப்பட்டு விட்டன.

என் அருமையான சகோதரனே! சகோதரியே! ஆற்றின் அணை திறக்கப்பட்ட உடன் எல்லா குழிகளும் மறைந்து போனது போல் இயேசுவுக்காக உன் உள்ளத்தை நீ திறந்து கொடுத்த பொழுதே புறப்பட்டு வந்த தேவகிருபையின் வெள்ளத்தில் எல்லா பாவங்களும் பறந்தோடி விட்டன. கல்வாரி இரத்தத்தினால் அவை கழுவப்பட்டு விட்டன.

வீண் சந்தேகங்களுக்கு இடங்கொடுத்துக் கலங்காதே.

உன் பாவங்களை கழுவிய இயேசுவை நன்றியோடு ஸ்தோத்தரி. "நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர் களுமாக்கின ' அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக ஆமென்." (வெளி. 1:6)

****

3. இரட்சிப்பின் நிச்சயம்

"நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்பதை எப்படி நிச்சயமாய் அறிந்து கொள்ள முடியும்?

ஆண்டவரை புதிதாக ஏற்றுக்கொண்ட ஒரு மனிதர் தலையில் விறகுகட்டு ஒன்றைச் சுமந்து கொண்டு தன் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். ஆண்டவரை நம்பாத ஒரு மனிதன் அவருக்கு எதிர்பட்டான். அவருடைய விசுவாச வாழ்வைக் கேலி செய்ய விரும்பிய அவன் அவரைப் பார்த்து கேட்டான். இரட்சிக்கப்பட்டேன் என்று எப்படி உங்களால் நிச்சயத்தோடு சொல்ல முடிகிறது? அதற்கு என்ன ஆதாரம்? இந்தக் கேள்வியில் பரியாசம் கலந்திருந்தது.

விறகுக்கட்டை சுமந்து வந்த தேவமனிதர் சற்று முன்பாக கண்ணை மூடிக் கொண்டு நடந்தார். தன் தலையிலிருந்த விறகுக்கட்டை கீழே போட்டுவிட்டு ஆண்டவரை நம்பாத அந்த மனிதனைப் பார்த்துக் கேட்டார். "நான் என் கண்களை மூடியிருக்கிறேன். ஆனால் விறகுக் கட்டு என் தலையில் இல்லை, அது கீழே விழுந்து விட்டது என்று திட்டவட்டமாக சொல்கிறேன். எப்படி இதை என்னால் கண்களை மூடிக் கொண்டு சொல்ல முடிகிறது?"

இதைச் சொல்ல என்ன கஷ்டம்? நீங்கள் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் பாரச்சுமை தலையில் இல்லை என்பதை உணர முடியுமே. பாரம் தலையை அழுத்துவதையும், அது கீழே விழுந்தால் தலையின் பாரத்தின் அழுத்தம் இல்லாதிருப்பதையும் யாரால் தான் உணர முடியாது?" என்றான், ஆண்டவரை நம்பாத அந்த வாலிபன்.

அந்த விசுவாசி கெம்பீரத்தோடு சொன்னார். "அதே விதமாகத்தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பதையும் என்னால் திட்டவட்டமாக உணர முடிந்தது. நான் இயேசுவை

ஏற்றுக் கொள்வதற்கு முன்பு, குற்ற உணர்வும், வெறுமையும் பாவ பாரமும் என் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்தன. ஆனால் நான் இயேசுக் கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட போதோ அவையெல்லாம் என்னை விட்டு நீங்கிப் போனதைத் திட்டவட்டமாக என்னால் உணர முடிந்தது. அதனால் நான் இரட்சிக்கப்பட்டிருகிறேன் என்பதை நிச்சயமாய் என்னால் சொல்ல முடிகிறது."

கேள்வி கேட்ட மனிதன் மௌனமாக அவ்விடம் விட்டு நடக்க ஆரம்பித்தான்.

காற்றைக் கண்ணால் பார்க்க முடியாவிட்டாலும் அது வீசுவதை உணர முடிகிறதல்லவா?

அது போலத்தான் ஆவியினால் பிறக்கும் இரட்சிப்பின் அனுபவமும், இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளும் போது ஒரு பாரம் நீங்கி இனம் புரியாத சந்தோசம் அநேகருக்கு ஏற்படுவதுண்டு. இந்நிலையில் இயேசு என் உள்ளத்தில் வந்தார் என்ற நிச்சயத்தோடு பாட்டு பாடுவோம். ஆனால் இந்த உணர்வு நிலை எப்போதும் எல்லோருக்கும் இருப்பதில்லை. சில நாட்கள் கடக்கும் போது சிலர் குழம்பி இரட்சிப்பின் நிச்சயத்தை குறித்து கலங்குவார்கள். இது அவசியமற்ற ஒன்று.

நமது இரட்சிப்பின் நிச்சயத்துக்குத் தெளிவான வாக்குத் தத்தங்களைத் தேவன் நமக்கு அளித்துள்ளார். நாம் அதை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிப்பின் நிச்சயத்தில் உறுதியாயிருக்கலாம்.

இதோ சில வாக்குத்தத்தங்கள்



- குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். (யோவான் 3:36)
- என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்து விட்டீர். (ஏசா. 38:17)

- உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன். (ஏசா. 43:25)
- உன் பாவங்களை கார்மேகத்தைப் போல அகற்றி விட்டேன். (ஏசா 44:22)
- நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார். (நாகூம் 7:19)
- அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். (யோவான் 1:12)
- ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் பிரவேசித்து அவனோடு போஜனம் பண்ணுவேன். (வெளி. 3:20)

இந்த அருமையான வாக்குத்தத்தங்களையெல்லாம் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அவர் பொய் சொல்லுகிற வரல்ல. சொல்லியும் செய்யாதிருக்கிறவரல்ல. என் அருமையான விசுவாசியே இந்த வாக்குத்தத்தங்களையெல்லாம் நீ விசுவாசிக் கிறாயா? விசுவாசியாவிட்டால் யார் மீது சந்தேகப்படு கிறாய்? தேவன் மீதல்லவா? ஆ ! இது எவ்வளவு மதியீனமான காரியம்?

ஒரு வார்த்தையை அதை சொல்லிய நபரின் குணங்களை வைத்து நம்புகிறோம். என் இளம் பருவத்தில் இலங்கையில் எட்டாம் வகுப்பு படிக்கும் போது நடந்த சம்பவம். திடீரென சில மாணவர்களுக்குள் சண்டை வந்து விட்டது. அப்பொழுது அங்கு வந்த விவசாய ஆசிரியர் சண்டையிட்ட மாணவர்களை விசாரித்தார். ஒருவர் மீது ஒருவர் குற்றசாட்டு களைச் சுமத்திக் கொண்டிருந்தனர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த ஆசிரியர் நீங்கள் சொல்வதை யெல்லாம் நம்பமுடியாது என்று சொல்லிவிட்டு இன்னொரு மாணவனைக் கூப்பிட்டு நடந்த விபரங்களையெல்லாம் கேட்டார். அந்த மாணவன் நன்கு படிக்கக் கூடியவன் மட்டுமல்ல அந்த ஆசிரியரின் நம்பிக்கைக்கு உரியவனும் கூட. அவன் வார்த்தைகளை நம்பிய ஆசிரியர் தவறு செய்தவர்களைத் தண்டித்தார்.

ஆண்டவர் எல்லா விதத்திலும் நம்பிக்கைக்கு உரியவரே அவருடைய வார்த்தையை எப்படி நாம் சந்தேகப்பட முடியும்?

இயேசு இரட்சகர் உலகத்தில் மனிதனாக வந்தது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையானது, அவர் பாவிகளுக்காக மரித்தது. அவர் பாவிகளுக்காக மரித்தது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தது. இது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை நாம் மனந்திரும்பி விசுவாசத்தோடு அவரை ஏற்றுக் கொள்ளும் போது அவர் நமது பாவங்களை மன்னிப்பதும், இதில் குழம்பி விட அவசியமேயில்லை.

இரட்சிப்பின் நிச்சயத்துக்கு இன்னும் சில உறுதிகள்

a) ஆவியானவரின் சாட்சி

"நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்". (ரோமர் 8:16)

ஒரு தாய் தன் குழந்தையிடம் அப்பாவைக் காட்டி மகிழ்ச்சியடைவதைப் போல பரிசுத்த ஆவியானவர் தேவனுக்கடுத்த குமாரனுக்கடுத்த காரியங்களில் நம்மைத் தூண்டி விட்டு தேவனுடைய குடும்பத்தில் நாம் ஒரு அங்கம் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

b) தேவன் பேரில் பிறக்கும் அன்பு

தேவன் நம் மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவான் 4:15)

இதுவரை தேவனை கடைமுறைக்காக ஆராதித்து அவருடைய காரியங்களில் முழுமனதோடு ஈடுபடாமல் இருந்திருக்கலாம். இப்பொழுதோ தேவன் மீது நன்றி கலந்த அன்பு பிறக்கிறது. தேவனுடைய காரியங்கள் மீது புதுவித நாட்டம் உருவாகிறது.

c) மற்றவர்கள் மீது பிறக்கும் அன்பு

"நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 3:14)

நாம் பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என விரும்புகிறோம். ஆண்டவர் நமக்குச் செய்ததை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்ற தாகம் பிறக்கிறது.

d) சுபாவத்தில் ஒரு மாற்றம்

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." (2 கொரி. 5:17)

முன்பு பாவத்தைத் தேடிப் போன நாம் இப்பொழுது அவற்றோடு போராட ஆரம்பித்திருக்கிறோம். பாவம் செய்ய விரும்பும் தாகம் போய் அதற்கு விலக வேண்டிய அவசியத்தை உணர்கிறோம்.

இதற்கு மேலும் நம்முடைய உள்ளத்தில் இரட்சிப்பின் நிச்சயத்தை குறித்த சந்தேகம் வருகிறதா? சந்தோஷப் படுங்கள். நமது உள்ளத்தில் இரட்சிக்கப்பட்டிருக் கிறோமா என்ற சந்தேகம் வருவதே நாம் தேவபிள்ளை என்பதற்கு உறுதியாக சாட்சியாகும். ஆம்! இரட்சிப்பைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகளின் உள்ளத்தில் தான் சாத்தான் இப்படிப்பட்ட சந்தேகங்களை உண்டு பண்ணுவான் புரிந்து கொள்ளுங்கள். மனந்திரும்பி விசுவாசத்தோடு அவரை ஏற்றுக்கொண்ட நீங்கள் நிச்சயமாய் தேவனுடைய பிள்ளை தான்.

இயேசு சொல்கிறார். " நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை." (யோவான் 10:28)

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெடி : என்ன ஜெனி? நேற்று என்னிடம் சொன்ன மாதிரி இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டாயா?

ஜெனி : இல்லை ஜெடி இயேசுவை ஏற்றுக் கொள்ளனும்னு எனக்கு ஆசை தான். ஆனால் என்னிடம் சில பாவங்கள் இருக்கு. அதை என்னால் விட முடியவில்லை. அதையெல்லாம் விட்டபிறகு நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன்.

ஜெடி : ஜெனி! உன் பாவத்தை உன்னால விட முடிஞ்சா அப்புறம் இயேசு கிறிஸ்து எதுக்கு? இயேசு கிறிஸ்து மட்டும்தான் நம்முடைய பாவத்திலிருந்தும், பாவஞ் செய்யத் தூண்டுகிற பாவ சுபாவத்திலிருந்தும் நமக்கு விடுதலை கொடுத்து உதவி செய்ய முடியும். எனவே உன் பாவத்தோடு இயேசுவண்டை வரனும். குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் அப்படீன்னு பைபிள்ள சொல்லியிருக்கு.

ஜெனி : ஐய்யையோ, நான் எப்படியெல்லாமோ நினைச்சுக் கிட்டேன். நீ சொன்னது நல்லா புரிஞ்சுது ஜெடி. நான் நிச்சயம் இயேசுவை என் உள்ளத்தில் ஏற்றுக்கொள்கிறேன்.

"உங்களுக்குப் புரிந்ததா?"

4. இரட்சிப்பைப் பெறாவிட்டால் என்ன?

கட்டாயம் ஒரு மனிதன் இயேசுக்கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? இரட்சிக்கப்படாமலே இந்த உலகத்திலே அநேகர் புகழோடும் சிறப்போடும் வாழ்கிறார்களே?

நல்லது! இப்படித்தான் அநேகர் நினைத்துக் கொள்கிறார்கள். ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஜியார்ஜ்ட்ரூட் என்றொரு தேவஊழியர் இருந்தார். இவர் ஒரு தடவை டெக்ஸாஸ் என்ற இடத்திலே ஒரு கோடீசுவர மனிதனுடைய வீட்டில் தங்கியிருந்தார். ஒரு நாள் இரவு தன் வீட்டு மேல்தளத்துக்கு ஜியார்ஜ்ட்ரூட்டை அழைத்துக் கொண்டு போன அந்தப் பணக்கார மனிதன் ஒரு திசையாகத் தன் கரங்களை நீட்டி ஏராளமான எண்ணெய்க் கிணறுகளைக் காட்டி அதெல்லாம் தன்னுடையது தான் என்றான். பின் இன்னொரு திசையைக் காட்டி கண்ணுக் கெட்டிய தூரம் வரைப் பரந்திருந்த தானிய வயல்களைக் காட்டி அதுவும் தன்னுடையது தான் என்றான். இப்படி நான்கு திசைகளையும் காட்டி அப்பகுதியில் பரந்து விரிந்திருந்த அனைத்தும் தனக்கே சொந்தமானது என்று அப்பணக்கார மனிதன் இப்படிக் கூறினான். 25 வருடங்களுக்கு முன்னாலே ஒன்றுமில்லாதவனாக நான் இப்பகுதிக்கு வந்தேன். இப்பொழுதோ இப்பகுதியில் நான்கு திசைகளிலும் தெரிவதெல்லாம் எனக்கு உரிமையாகிவிட்டது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜியார்ஜ்ட்ரூட் "எல்லாம் சரிதான். அங்கே உனக்கு என்ன உண்டு?" என்று வானத்தை நோக்கி கையைக் காட்டினார். தலைகுனிந்தான் அம்மனிதன்.

வாழ்க்கை உலகத்தோடு முடிந்து விடப்போவதில்லை. இம்மையை மட்டும் நினைத்து இயேசுவுக்கும், அவர் தரும் இரட்சிப்புக்கும் இடம் இல்லை என மறுப்புத் தெரிவித்து புறக்கணிப்போமானால் நமக்கு ஏழுவித ஆசீர்வாதம் இல்லாமல் போய் விடும் அவை.

முதலாவதாக **இரட்சிப்பை அலட்சியம் பண்ணும் ஒரு மனிதன் ஜீவன் இல்லாதவன்.** சரீரத்தில் அவன் உயிருள்ளவன் போலத் தோற்றமளிக்கலாம். ஆனால் அவனுடைய ஆத்துமா ஜீவனில்லாமல் செத்துக் கிடக்கிறது. கிறிஸ்துவே ஜீவன், அவரை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஆத்துமா மரித்த நிலையில் இருக்கும். (யோவான் 5:40)

தனக்குப் பரிசாகக் கிடைத்தக் கிளிக்கூண்டை ஒரு பெண் மிகவும் கவனமாக பாதுகாத்தாளாம். ஆனால் அதனுள் இருந்த கிளியை பராமரிக்காமல் விட்டதால் அது மரித்துப் போயிற்று. கிளிக்கூண்டை விட கிளி முக்கியம் என்பது போல சரீரத்தை விட ஆத்துமா முக்கியம். இயேசுவின் இரட்சிப்பை நாம் பெறாவிட்டால் அந்த ஆத்துமாவுக்கு ஜீவன் இல்லை.

இரண்டாவது, **தேவபிள்ளை என்ற அதிகாரம் இரட்சிப்பைப் புறக்கணிப்போருக்கு இல்லை.** உலகத்தில் பல தரப்பட்ட மனிதர்கள் இருந்தாலும் தேவனுடைய பார்வையில் இரண்டுவித கூட்டத்தினரே உண்டு. ஒன்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட தேவனுடையபிள்ளைகள், மற்றோர் தேவனுடைய இரட்சிப்பைப் பெறாத பிசாசின் பிள்ளைகள் (யோவான் 1:21) இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் இரட்சகராக ஏற்றுக்கொள்ளா விட்டால் உலகத்தில் பல சிறப்புகள் இருந் தாலும் நீ பிசாசின் பிள்ளையென்ற நிலையிலேயே காணப் படுவாய். ஓ! இது எவ்வளவு வேதனைக்குரியது. (யோவான் 8:44)

மூன்றாவது, **இரட்சிப்பைப் புறக்கணிப்போருக்கு தேவனோடு ஐக்கியமில்லை.** இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது தேவனோடு ஐக்கியம் என்ற மாபெரும் சிலாக்கியம் நமக்கு கிடைக்கிறது. உலகத்திலே நமக்கு எவ்வளவு பெரிய நபர்களின் ஐக்கியம் இருந்தாலும் தேவனோடு ஐக்கிய மில்லாமல் இருப்போமானால் அது பெருத்த நஷ்டமே. (எபே. 2:16)

நான்காவது, **இயேசுவின் இரட்சிப்பைப் புறக்கணிப் போருக்கு நித்தியத்தின் பாதுகாப்பில்லை.** மோட்சம் நரகம் என்பதைக் குறித்து வேதம் திட்டவட்டமாகப் பேசுகிறது. இயேசுவை ஏற்றுக்கொள்வோர் நரகம் என்ற நித்திய அழிவிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். அதனால் தான் அவர்கள் தைரியமாக மரணத்தை சந்திக்கிறார்கள். ஆனால் இரட்சிப்பின் அநுபவம் அற்றோரால் மரணத்தை தைரியமாகச் சந்திக்க முடியாது. அவர்களுக்கு நித்தியத்தில் வரப்போகும் நரகாக்கினை அவர்களைப் பயமுறுத்துகிறது. (யோவான் 11:25, 5:29) நரகத்திற்குப் போகாமலிருக்க ஒரு வழி உண்டு. அது தான் இயேசு தரும் இரட்சிப்பு. ஆனால் நரகத்திற்குள் போய் விட்டால் அங்கிருந்து திரும்பி வர வழியே கிடையாது.

ஐந்தாவது, **இரட்சிப்பைப் பெறாதோருக்கு வேதனையற்ற ஆசீர்வாதமில்லை.** உலகப்பிரகாரமாக எல்லாவற்றிலும் இரட்சிக்கப்படாத மனிதன் செழித்திருக் கலாம். ஆனால் அதில் வேதனைகள் உண்டு.

ஆனால் இரட்சிக்கப்பட்ட மனிதனையோ ஆண்டவர் ஆசீர்வதிக்கும் போது அத்தோடு மனசமாதானத்தையும் அருளுகிறார். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி. 10:22)

ஆறாவது, **இரட்சிக்கப்படாத மனிதனுக்கு இயேசுவின் கிருபையின் உதவியில்லை.** அவன் இவ்வுலகத்திலும், மரணத்திற்கு பின்பும் தேவனுடைய திட்டவட்டமான நியாய தீர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும். அன்புள்ள தேவன் தரும் இரட்சிப்பை அலட்சியம் பண்ணினால் அவரைப் பட்சிக்கிற அக்கினியாகச் சந்திக்க வேண்டியிருக்கும். (வெளி 22:12) இது எவ்வளவு நிர்ப்பந்தமானது?

ஏழாவது, **இரட்சிப்பைப் புறக்கணித்தால் தேவன் தரும் மேன்மைகள் எதுவும் உனக்கில்லை.** பாவ மன்னிப்பு பரிசுத்த வாழ்வு, ஆவியானவரின் அநுபவங்கள். வரங்கள், வெற்றியான

மரணம், மகிமையான பரலோகம். இவையெல்லாம் இயேசுவை ஏற்றுக்கொள்வோருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளன. இவை யெல்லாம் உனக்கு வேண்டாமென்றா கீழான காரியங் களுக்காக உன் வாழ்வை அர்ப்பணிக்கப் போகிறாய்?

உலகத்தில் எல்லாவற்றிலும் செழிக்க வேண்டும். தேவனுடைய காரியங்களில் சற்று அளவோடு சன்மார்க்கமாய் இருக்கவேண்டும். தேவனுடைய உதவியும் கிடைக்க வேண்டும். - இப்படித்தான் அநேகர் நினைக்கிறார்கள். இப்படிப்பட்டோர் தேவனால் சில உதவியையும் பெற்றிருக்கலாம். ஆனால் தேவனிடத்தில் பங்குள்ளவர்களாக இருக்க இரட்சிக்கப்பட வேண்டும்.

ஒரு அம்மா வீட்டினுள் இருந்தார்கள். வாசலுக்கு வெளியே ஒரு பிச்சைக்காரன் வந்து நின்று, அம்மா ஒரு ஐம்பது பைசா தாருங்கள் என்று பிச்சை கேட்டான். அம்மா அவனுக்கு 50 பைசா பிச்சைப் போட்டு அனுப்பினார்கள். சற்று நேரம் கடந்து பெற்ற மகன் ஓடி வந்து அம்மா எனக்கு ஐம்பது பைசா தாருங்கள் என்று உரிமையோடு கேட்டான். இரண்டு பேரும் அம்மா என்று தான் கூப்பிட்டார்கள். இரண்டு பேரும் ஐம்பது பைசா தான் கேட்டார்கள். ஆனால் ஒருவன் பிச்சைக்காரன். மற்றவன் உரிமையுள்ள மகன். பிச்சைக்காரனுக்கு மகனைப் போன்ற உரிமையும் பங்குமில்லையே. இயேசுவின் இரட்சிப்பைப் பெறாத மனிதனும் தேவனுடைய உதவியைச் சில நேரம் பெற்றாலும் அவனுக்கு எவ்வித பங்குமில்லை. பாத்தியதையுமில்லை.

இரட்சிக்கப்படாத சகோதரனே, சகோதரியே

நீ ஏன் வாசலுக்கு வெளியே நிற்பவனைப் போல இருக்க வேண்டும். இயேசுவை ஏற்றுக்கொண்டு அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணும் புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெறு. தேவனிடத்தில் பங்குள்ள வாழ்வை நிச்சயப்படுத்திக் கொள். அதுவே அவசியமானது ஆசீர்வாதமானது.

"இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்" (எபி. 2:4)

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெனி : ஜெடி நான் இயேசுக்கிறிஸ்துவை என் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டேன். ரெண்டு நாள் ரொம்ப சந்தோஷமாகத்தான் இருந்திச்சு ஆனா . . .?

ஜெடி : ஏன்? என்னாயிற்று?

ஜெனி : நேத்து திடீர்னு எங்க அம்மாகிட்ட கோபமா பேசிட்டேன். எனக்கு மனசுக்கு நல்லாவே இல்லை. திரும்பவும் எப்படி நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதென்று யோசிக்கிறேன்.

ஜெடி : ஜெனி நீ கோபப்பட்டதுனாலேயோ அல்லது ஏதாவது தவறு செய்றதுனாலேயோ ஆண்டவர் உன்னை விட்டு போய் விட்டார்னு நெனைக்கக் கூடாது. நாம் தவறு செய்யும் போது நம்ம அம்மா அப்பா நம்மள விட்டு ஒதுங்குகிறாங்களா? இல்ல. வேதனைப் படறாங்க. அதுமட்டுமில்ல நம்மை திருத்தனும்னு நினைக்கிறாங்க.

ஜெனி : அப்படீன்னா இன்னும் நாள் ஆண்டவர் பிள்ளைதானா?

ஜெடி : நிச்சயமா? தவறு செய்யும் போது நாம் இரட்சிப்பை இழக்கிறதில்லை. இரட்சிப்பின் சந்தோஷத்தைத்தான் இழக்கிறோம். ஆண்டவர் கிட்ட மனம் வருந்தி மன்னிப்பு கேட்டோம்னா இழந்த சந்தோஷத்தைத் திரும்பவும் பெறலாம்.

ஜெனி : நல்லா புரிஞ்சுது ஜெடி நான் ஆண்டவரிடம் நிச்சயம் மன்னிப்புக் கேட்கிறேன்.

"உங்களுக்குப் புரிந்ததா?"

5. வளர்வது எப்படி?

"இரட்சிப்பைப் பெற்றால் மட்டும் போதாது. ஆவிக்குரிய வாழ்க்கையில் நீ வளரவும் வேண்டும்," என எங்கள் போதகர் அடிக்கடி கூறுகிறார். ஆவிக்குரிய வாழ்வில் வளர்வது எப்படி?

ஒரு குழந்தைக்கு முதல் வயது நிரம்பியதும் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. ஒரு பெரியவர் அந்தக் குழந்தைக்கு ஒரு அழகான பொம்மையைப் பரிசாகக் கொடுத்தார். பொம்மையைக் கண்ட குழந்தை அதை வைத்து ஆனந்தமாய் விளையாட ஆரம்பித்தது. அழகு பொம்மையை வைத்து ஆனந்தமாய் விளையாடிய குழந்தையைப் பார்த்த அந்தப் பெரியவர் தம் அருகிலிருந்த ஒருவரிடம் மெல்லக் கேட்டார். குழந்தை பொம்மையை வைத்து விளையாடுவது எப்படி இருக்கிறது?

அருகிலிருந்தவர் சொன்னார். "இதை விட மோட்ச ஆனந்தம் வேறு என்ன இருக்கிறது?"

பெரியவர் தொடர்ந்தார். "இந்தக் குழந்தை வளர்ந்து வாலிப வயதடையும் போது பொம்மையை வைத்து விளையாடி கொண்டிருந்தால் எப்படி இருக்கும்?"

அருகிலிருந்தவர் கூறினார், "ஐயோ அதைவிட நரக வேதனை வேறு எதுவும் வேண்டாம். ஆள் வளர்ந்த மாதிரி அறிவு வளர வேண்டாமா? வாலிப வயசுல பொம்மையை வைத்து விளையாடினா அறிவு வளரலன்னு அர்த்தம்"

பெரியவர் சொன்னார், "இது மாதிரி தான் ஆன்மீக வாழ்க்கையிலும் நாம் வளரலன்னா அது வேதனைக்குரிய காரியம்".

அநேக கிறிஸ்தவர்களுக்கு வயசாகிறது. ஆனால் அவர்கள் வளர்வதேயில்லை என்றார் ஒருவர். ஆனால் நாம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சிடைய வேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு.

"செடிகள் வேரூன்றுவது, அந்த மட்டத்திலேயே நிற்பதற்கல்ல; உயர வளர்வதற்குத்தான்; அது போலவே மனிதர்களும்" என்றார் ஹென்றிவார்ட் பீச்சர் என்பவர்.

பிறந்த குழந்தையின் வளர்ச்சியும், நடப்பட்ட செடியின் வளர்ச்சியும் அவசியமாயிருப்பதை விட தேவனுக்குள் நாம் வளர்வது மிகவும் அவசியமாயிருக்கிறது.

வளர்ச்சி நிற்கும் இடத்தில் வீழ்ச்சி ஆரம்பமாகிறது என்பார்கள். இதோ ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை ("Growth") என்ற சொல்லின் எழுத்துக்கள் மூலம் விவரிக்கிறேன்.

"G" - Go to God through Prayer daily. (John 15:7)
அனுதினமும் ஜெபி. (யோவான் 15:7)

"R" - Read God's word daily. (Acts 17:11)
அனுதினமும் வேதம் வாசி. (அப். 17:11)

"O" - Obey God, moment by moment. (John 14:21)
அனைத்து நேரமும் ஆண்டவருக்கு கீழ்ப்படி. (யோவான் 14:21)

"W" - Witness for christ by your life and words. (Mat. 4:19)
அனுதின வாழ்விலும் வார்த்தையிலும் - ஆண்டவருக்கு சாட்சியாயிரு. (மத். 4:19)

"T" - Trust God for every detail of your life. (I Pet. 5:7)
அனைத்து சூழ்நிலையிலும் ஆண்டவரை நம்பு. (1 பேதுரு 5:7)

"H" - Holy spirit - Allow God to control our life.
ஆவியானவரின் ஆளுகைக்கு அர்ப்பணி.

இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையைத்தான் வளர்கிற வாழ்க்கை அல்லது வெற்றி வாழ்க்கை அல்லது தேவனுக்கு பிரியமான வாழ்க்கை எனக் குறிப்பிடுவார்கள்.

(G) - உயிர் வாழ்வதற்கு சுவாசிப்பது எப்படி அவசியமோ அப்படியே ஆவிக்குரிய வாழ்வில் ஜெபிப்பது மிக மிக மிக மிக மிக .... அவசியம். ஜெபிக்கிறவன் பாவத்தை நிறுத்துவான்; பாவம் செய்கிறவன் ஜெபத்தை நிறுத்துவான். எனவே ஜெபத்தை தொடருங்கள். ஜெபிக்கும் போது நாம் தேவனோடு பேசுகிறோம்.

(R) - உயிர் வாழ்வதற்கு உணவு எப்படி அவசியமோ அப்படியே ஆவிக்குரிய வாழ்வுக்கு வேதம் வாசிப்பது தவிர்க்கவே கூடாத அதி அவசியமான காரியமாகும். உணவருந்தாத ஒருவரின் சரீரம் மெலிந்து நலிந்து மரணத்தை எட்டுவது போல் வேதத்தை புறக்கணிப்போரின் ஆன்மீக வாழ்வு அபாயத்தைச் சந்திக்கும். வேதம் வாசிக்கும் போது தேவன் நம்மோடு பேசுகிறார். இந்த இனிய அனுபவத்தை ஒருபோதும் விட்டு விடாதிருங்கள்.

(O) - கீழ்ப்படியில் கால் வைத்தால் தான் மேல்படிக்கு செல்ல முடியும். ஆவிக்குரிய வாழ்விலும் தேவனுக்கு கீழ்ப்படிவது தேவாசீர்வாதத்தின் இரகசியம். மருத்துவருக்கு கீழ்ப்படியாத நோயாளி சுகமாவதை இழப்பான். ஆசிரியருக்கு கீழ்ப்படியாத மாணவன் அறிவை இழப்பான். தேவனுக்குக் கீழ்ப்படியாதவனோ எல்லாவற்றையும் இழப்பான். தவறாமல் தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.

(W) - தேவனுடைய பிள்ளைகள் உலகிற்கு சாட்சிகளாக வாழ்க்கையிலும், வார்த்தையிலும் திகழ வேண்டும்.

சாரமில்லாத உப்பு சந்தியிலே கொட்டப்படும். வெளிச்சமில்லா விளக்கு மூலையிலே போடப்படும்.

சாட்சியில்லா வாழ்வினாலே என்ன பயன்? சாட்சிகளாயிருங்கள்.

(T) - ஆண்டவரை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு நமது நம்பிக்கை சுயபெலத்தில் மீது இருந்தது. ஆண்டவரை ஏற்றுக் கொண்ட பின் நமது முழு நம்பிக்கையும், முழுச் சார்தலும் அவர் மீதே இருக்க வேண்டும். தேவனை நம்புகிறவன் செழிப்பான் என்கிறது வேதம். நம்பத் தகுந்தவர் தேவன் அவரை நம்ப மறுப்பது மதியீனம்.

(H) - சத்துருவின் கண்ணிகள் நிறைந்த உலகில் நாம் ஆண்டவருக்குள் வாழவும், வளரவும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் வெற்றிகரமாக, வளர்கிற ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை யாரும் வாழ முடியாது.

ஆவியானவரை நாம் ஆளுகை செய்ய முற்படாமல் ஆவியானவர் நம்மை ஆளுகை செய்ய அர்ப்பணிப்போம். ஜீவ நதியாம் அவர் நமக்குள் பாய்ந்தோடும் போது வளர்ச்சியும் செழிப்பும் வளமாக இருக்கும்.

- **நீதிமான் கேதுருவைப் போல வளருவான். (சங். 92:12)**

- **கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளருங்கள். (2 பேதுரு 3:18)**

- **நீங்கள் வளரும்படி திருவசனத்தின் மேல் வாஞ்சையாயிருங்கள். (1 பேதுரு 2:3)**

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெனி: ஜெடி நீ சொன்ன ஐடியா! ரொம்ப பிரமாதம்.

ஜெடி : ஏன் தவறு செய்தபின் ஆண்டவர்கிட்ட மன்னிப்பு கேட்டாயா?

ஜெனி: ஆமாம்! நேற்று மட்டும் ஆறுமுறை கோபப்பட்டேன் உடனேயே மன்னிப்புக் கேட்டுட்டேன்.

ஜெடி : ஜெனி! செய்த பாவத்துக்கு மன்னிப்பு கேட்டுட்டு திரும்பவும் அந்த பாவத்தைச் செய்யக்கூடாது அதிலிருந்து விடுபடப் பார்க்கணும். ஒரு முறை சேற்றில் விழுந்த ஆடு தூக்கிவிடப்பட்ட பின் திரும்பவும் அதுல விழாம இருக்கனும்னு ஜாக்கிரதையாயிருக்கும் இல்லையா?

ஜெனி: ஜெடி சில பாவத்தை நான் செய்யாம இருக்கவே முடியலையே?

ஜெடி : அதற்காகத்தான் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்ய காத்திருக்கிறார். நமது பெலவீனங்களை நாம் அவரிடம் ஒப்புக்கொடுக்கும் போது அவர் நம்மை வெற்றி வாழ்வு வாழ உதவுவார். சில தோல்விகள் வந்தாலும் அதை ஆத்தும பயிற்சியாக எடுத்துக் கொண்டு அவரையே சார்ந்திருக்க வேண்டும். எவ்வளவு தூரம் பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருக்கிறோமோ அவ்வளவு தூரம் பாவத்தை மேற்கொள்வது சாத்தியம்.

ஜெனி: நல்லா புரிஞ்சுது ஜெடி.

"உங்களுக்குப் புரிந்ததா?"

6. நண்பர்கள் யார் ...?

நான் இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் என் பழைய நண்பர்களை விட்டு விட வேண்டுமா? எல்லோரையும் நேசி என்பது தானே வேதாகமத்தின் கட்டளை?

அன்பு வேறு. ஐக்கியம் வேறு. நாம் எல்லோரையும் நேசிக்க வேண்டும் என்று வேதம் கூறினாலும் தேவனோடும் தேவபிள்ளைகளோடும் மட்டுமே ஐக்கியம் கொள்ள வேண்டும் என வேதாகமம் வலியுறுத்துகிறது. (I யோவான் 1:3,6, II கொரி 6:17, அப். 2;30, எபி. 7:26)

நம்மோடு பழகக்கூடிய நபர்கள் நம்முடைய பழக்க வழக்கங்களிலும், இதய எண்ணங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர்கள். எனவே இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத நபர்களோடு ஐக்கியத்தை தவிர்ப்பது அவசியம். அவர்களை நீ பகைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்களுடைய உலகப் பிரகாரமான பேச்சுகளுக்கும், செயல்களுக்கும் கட்டாயம் நீ விலகித்தான் இருக்க வேண்டும்.

"கெட்ட நண்பர்கள் நரகத்தின் தூதுவராய் நம்மை மயக்கி அழைத்துச் செல்வார்கள்." என்றார் ஃபீல்டிங் என்பவர்.

"ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாத ஒருவன் விசுவாசியின் உண்மை நண்பனாக ஒருநாளும் இருக்க முடியாது. அவன் மூலம் பிசாசு வலை விரிப்பான்" என்றார் ஒரு தேவமனிதர்.

தவறான நட்பு பாசி போல், தான் படர்ந்துள்ள சுவரைப் பலவீனமாக்கி பாழ்ப்படுத்தும் என்பதை நாம் மறந்து விடல் கூடாது. உவைஸ் என்பவர் இவ்விதம் கூறுகிறார்.

உன் சன்மார்க்க ஜீவியத்தையும், ஆவிக்குரிய ஜீவியத்தையும் ஊனப்படுத்தக்கூடிய சிநேகிதர்களை விடு. ஒரு கிறிஸ்தவன் மனந்திரும்பாத மக்களிடமிருந்து முற்றிலுமாய் விலகியிருக்க முடியாது. ஆனால் அவர்களை ஆத்தும நண்பர்களாக்கிக் கொள்ளக்கூடாது.

நட்பைக் குறித்து ஞானியாகிய சாலமோன் இவ்விதம் கூறுகிறார்.

ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான். மூடருக்குத் தோழனோ நாசமடைவான். (நீதி. 13:20)

கோபக்காரனுக்குத் தோழனாகாதே, உக்கிர மனுஷனோடு நடவாதே. அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்கு கண்ணியை வருவிப்பாய். (நீதி. 22:24,25)

சங்கீத புஸ்தகத்தின் ஆரம்பமே தவறான கூட்டுறவை விட்டு நம்மை விலகியிருக்க எச்சரிக்கிறது. (சங். 1:1)

ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் உனக்கு சரியான நண்பர்களாக இருக்க முடியாது. ஆண்டவரை விட்டு பின்வாங்கிப் போனவர்களின் நட்பும் மிகவும் அபாயமானதே.

ஆண்டவரை ஏற்றுக்கொண்ட, உன் வயதுக்கொத்த ஒரு நபரை உன் நண்பராகத் தெரிந்து கொள். நல்ல நண்பர்களுக்காக ஜெபிக்கும் போது தேவன் வழி நடத்துவார். எதிர் பாலரை நண்பராக்க முனைவது இடறலாகவே முடியும். உன் பக்தி விருத்திக்கேதுவான ஒரு நண்பனையே நீ கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும். சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு. (நீதி. 18:24) என்கிறார் ஞானி.

கூடாத நட்பைக் குறித்து ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது. ஆற்றில் பித்தளைக்குடம் ஒன்று மிதந்து சென்றதாம். வழியில் மிதந்து வந்த ஒரு மண் குடத்தைப் பார்த்து பித்தளைக் குடம் சொன்னதாம். வா நாம் இருவரும் நட்பாயிருப்போம். இருவரும் சேர்ந்தே பயணம் செய்வோம்.

அதற்கு மண்குடம் சொன்னதாம். நட்பு நல்லுறவு எல்லாம் நல்லது தான். அனால் உன்னைவிட்டு விலகியிருப்பதே எனக்கு நல்லது. கொஞ்சம் மோதினாலுங்கூடப் போதும் சுக்கு நூறாகப் போவது நான்தானே என்று கூறி தனிவழி போனதாம் மண்குடம். பித்தளைக்குடம் போலத்தெரியும் உலக நட்பைத் தெரிந்து கொண்டு உன்னையே உடைத்துக் கொள்ளாதே.

தரையில் வாழும் எலியும் தண்ணீரில் வாழும், தவளையும் தங்கள் நட்புக்கு அடையாளமாக ஒரு நூலைக் கட்டிக் கொண்டதாம். திடீரென்று தவளை தண்ணீருக்குள் பாய எலியும் தண்ணீரில் விழுந்து தத்தளித்து இறந்ததாம்.

தம்பி தங்கையே, தவறான நட்பின் விபரீத விளையாட்டு வேண்டாம் உனக்கு. விசுவாசிகள் மட்டுமே உன் நட்பில் இடம் பெறட்டும்.

தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப் போல மனுஷரில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும். (நீதி. 27:19)

உமக்கு பயந்து உமது கட்டளைகளைக் கைக் கொள்ளுகிற யாவருக்கும் நான் தோழன். (சங். 119:63)

★★ ★★ ★★ ★★ ★★

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெனி : எனக்கு ரொம்ப வெட்கமா இருக்கு ஜெடி எல்லா பிள்ளைகளும் என்னைக் கேலி பண்றாங்க. சன்னியாசி, துறவி, பரிசுத்தவாட்டி இப்படியெல்லாம் பேசுறாங்க.

ஜெடி : ஜெனி இந்த பிரச்சனை எல்லோருக்குமே உண்டு நமக்காக இயேசுக் கிறிஸ்து எவ்வளவோ பரியாசங்களைச் சகித்தார். நாமும் அவருக்காக சகித்துதான் ஆகணும்.

ஜெனி : யாராவது கேலி பண்ணினா இனி நல்லா சாபம் போட்டிடலாம் போல இருக்கு.

ஜெடி : அப்படியெல்லாம் செய்திராதே. சிலர் மனசுல ஒண்ணு நினைக்காம பொழுது போக்கா பரியாசம் பண்ணலாம். இன்னும் சிலர் நீ நல்ல பிள்ளையா மாறிட்டதால பொறமையினால் பரியாசம் பண்ணலாம். ஆனா எல்லோருடைய நோக்கமும் என்ன தெரியுமா? உன்னைக் கோபப்படுத்துவதும் நீ ஏதாவது தவறான விதத்தில் அவர்களை எதிர்க்கனும்கிறது தான். நீ அப்படி ஏதாவது செய்தீன்னா அவங்க கேலியும் கிண்டலும் அதிகமாயிருக்கும்.

ஜெனி : அப்ப என்னதான் செய்யனும்.

ஜெடி : மற்றவங்க கேலி பண்ணும் போது அமைதியா சிரித்துக் கொண்டே போய்விடு. சிலநேரம் காது கேளாதது போல் அமைதியாக இருந்து விடு. அவர்களுக்காக தினமும் ஜெபி. உன்னோடு ஆண்டவரும் அவர்களோடு சாத்தானும் இருக்கிறார்கள் என்பதை மறவாதே. நிச்சயம் அவர்கள் மாறுவார்கள்.

ஜெனி : நல்லா புரிஞ்சுது ஜெடி.

"உங்களுக்குப் புரிந்ததா?"

7. வீட்டிலே போராட்டம்...?

என் பெற்றோர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. என்னை அவர்கள் அடிக்கடி கண்டிக்கிறார்கள். நான் அவர்களோடு• ஒத்துப்போக முடியாமல் தவிக்கிறேன். என்ன செய்வது?

பெற்றோர்கள் இரட்சிக்கப்பட்டவர்களோ அல்லது இரட்சிக்கப்படாதவர்களோ அவர்கள் மூலமாகவே ஆண்டவர் உனக்கு ஒரு வாழ்க்கையை அருளிச் செய்திருக்கிறார் என்பதை மறந்து போகாதே.

இரட்சிப்பைப் பெற்ற பிள்ளைகளாலும், இரட்சிக்கப் படாத பிள்ளைகளாலும், பெற்றோரோடு ஒத்துப் போக முடியவில்லை என்ற பிரச்சனை எங்கும் எழுகிறது.

இதினிமித்தம் குடும்பங்கள் யுத்தகளங்களாகிக் கொண்டிருக்கின்றன. தலைமுறை இடைவெளியே இந்தத் தகராறுக்குக் காரணம் என்கிறார் ஒருவர். எனினும் இதைக் குறித்து 12 உண்மைகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.

1) பெற்றோருக்கு கீழ்ப்படிவது தேவகட்டளை (யாத். 20:12, எபே 6:1) அது தேவனுடைய பார்வையில் மிகவும் சரியான காரியம். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதைத் தமிழ்க் கலாச்சாரமும் வலியுறுத்துகிறதே.

2) பெற்றோரின் கண்டிப்பு, அது அன்பின் வெளிப்பாடுதான், பெற்றோர்கள் தங்கள் மீது கொண்டுள்ள அன்பைப் பிள்ளைகள் உணர்வதில்லை. தங்கள் பெற்றோர் கல்லறையில் அடக்கமாகும் வரை அல்லது தங்களுக்கே

குழந்தைகள் பிறக்கும் வரை அதை உணர மாட்டார்கள் என்றார் பிலிப்ஸ்குக். இது மறுக்க முடியாத உண்மையே. என் தந்தை மிகவும் கண்டிப்பானவர். அவர் என்னைக் கண்டித்து வளர்த்ததற்காக இன்று அதிகமாய் நான் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். சிட்சைகள் அன்பின் வெளிப்பாடு என வேதமும் விளம்புகிறதே. (எபி. 12:6-10)

3) பெற்றோருக்கு நம்மைக் கண்டிப்பதற்கு உரிமையுண்டு. அந்த உரிமையைத் தேவன் அவர்களுக்கு அருளியிருக்கிறார். அறியாப் பருவத்திலிருந்து இரவும், பகலும் நம் மேல் கவனம் வைத்து, நமது முன்னேற்றத்தை முனைப்பாக கொண்டு உடை, உணவு, படிப்புக்காக செலவழிக்கும் பெற்றோருக்கு உன்னைக் கண்டிக்க உரிமையுண்டு என்பதை நினைவிலிறுத்து. தண்டனையின் வழிதான் நமது மதியீனத்தை மாற்றும் எனவும் வேதம் விளம்புகிறதே. (நீதி. 22:5, 23:13)

4) அநேகர் தங்கள் பெற்றோர் தங்களை அதிகமாய் கண்டிப்பதாக நினைக்கின்றனர். மற்ற குடும்பங்களின் பெற்றோர் அப்படி இல்லை எனவும் தங்களுக்கு மட்டுமே கண்டனங்கள் வருவதாகவும் நினைக்கின்றனர். இது தவறு. ஒவ்வொரு குடும்பத்தின் தராதரமும் வெவ்வேறு. ஒவ்வொருவர் செய்யும் தவறுகளிலும் தண்டிக்கும் முறைகளிலும் வேறுபாடு உண்டு. ஒப்பிட்டுப் பார்த்து, உன் பெற்றோரைக் கசந்து கொள்ளாதே.

5) சில வாலிபர்கள் தாங்கள் செய்வதுதான் சரி என்றும் பெற்றோர் சொல்வது தவறு எனவும் நினைக்கின்றனர். நம்மை விடப் பெற்றோர் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்கள் என்பதை ஒவ்வொரு வாலிப சகோதர

சகோதரியும் கட்டாயம் புரிந்து கொள்வது நல்லது. நமது செயல்களும் முடிவுகளும் எவ்வளவு தவறானவை என காலங்கடந்தே சில நேரம் புரிந்து கொள்கிறோம். தகப்பனின் போதனையைக் கேள் என்ற சாலமோனின் ஆலோசனையைக் கடைப்பிடிப்போம். (நீதி. 1:8)

6) சில நேரம் பெற்றோரும், பெரியோரும் கண்டிக்கும் போது வாலிப சகோதர, சகோதரிகள் தவறான காரியங்களில் ஈடுபட்டு விடுகிறார்கள்.

- சில பிள்ளைகள் முகத்தை தூக்கிக் கொண்டு முறுமுறுத்துக் கொண்டிருப்பார்கள்.

- சில பிள்ளைகள் எரிந்து விழுந்து பெற்றோரை எதிர்த்துப் பேசுவார்கள். சில நேரம் அலட்சியமாய்ப் பேசுவார்கள்.

- சில பிள்ளைகள் தற்கொலை செய்யப் போவதாகவும் வீட்டை விட்டு ஓடப்போவதாகவும் மிரட்டுவார்கள்.

- சிலர் சாப்பிடாமல், ஆலயத்துக்கு வராமல், குடும்ப ஜெபங்களில் பங்கு பெறாமல், முரண்டு பண்ணி எதிர்ப்பைக் காட்டுவார்கள்.

எனதருமையான தம்பி, தங்கையே இவற்றில் எந்தக் காரியத்தையும் நீ பின்பற்றி உன் பெற்றோருக்கும் தேவனுக்கும் வேதனையை உண்டுபண்ணி உன் சாட்சியைக் கெடுத்துக் கொள்ளாதே.

7) பெற்றோரும், பெரியோரும் கண்டிக்கும் போது நீ தவறிழைத்திருந்தாயானால் தாழ்மையோடு ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கேள். உன்னிடத்தில் உண்மையிலேயே தவறில்லாதிருந்தால் அமைதியோடு உன் நிலையைச் சொல். பெற்றோர் அதிக கோபமாயிருந்தால் சற்று தாமதித்து உன் நிலையை விளக்கிக்கூறு. இது பின் நாட்களில் உன் மதிப்பை உயர்த்தும்.

அநேகம் பிள்ளைகள் தாங்கள் தவறு செய்திருந்தாலும் தங்கள் பெற்றோர் தங்களைக் கண்டிக்கக்கூடாது என நினைக்கின்றனர். இது கூடாத மனப்பான்மை. தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான் என்கிறது நீதிமொழிகள். (நீதி. 29:15)

8) சில வாலிப தம்பி தங்கையர் பெற்றோர் தங்களை மிகவும் சிறு பிள்ளைகளைப் போல நடத்தி கண்டிப்பதாக நினைக்கின்றனர். சில வேளைகளில் இது உண்மை யாகவும் இருக்கலாம். பள்ளியிலும், ஆலயத்திலும், ஊரிலும் நாம் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் வீட்டில் பெற்றோருக்கு அடங்கியிருக்க வேண்டிய பிள்ளைகள் தாம். பெற்றோர் உங்களை சிறு பிள்ளைகளைப் போல நடத்தினாலும் நீங்கள் பெரியவர்களைப் போன்று அமர்ந்து நடந்து கொள்ளுங்கள் உங்கள் ஆள்தன்மைக்கு விரைவில் மதிப்பு வரும்.

(12 வயதில் வேதபாரகரிடம் கேள்விகள் கேட்டு வாயடைத்த இயேசு பெற்றோரிடம் கீழ்ப்படிந்து அடங்கியிருந்தார் என்பதை முன்மாதிரியாகக் கொள்ளுங்கள். லூக்கா 2:47,51)

9) தங்களைக் கண்டிப்போர் தங்கள் பக்கம் உள்ள நீதி நியாயங்களைப் புரிந்து கொள்வதில்லை என வாலிபர் நினைக்கின்றனர். பெற்றோர் புரிந்து கொள்ளவில்லையே என்று புலம்புகிற நீ, முதலில் ஏன் அவர்களைப் புரிந்து கொள்ள முற்படக் கூடாது? அவர்களுக்கும் சரீர பலவீனங்கள் உண்டு. வேலை மற்றும் பணப்பிரச்சனை உண்டு. வருங்காலத்து குடும்ப மேன்மைக்கு காரணமாக நீ இருக்க வேண்டும் என்று, உன்னைக் குறித்த ஒரு எதிர்பார்ப்பு உண்டு. நீ சமுதாயத்தில் உயர வேண்டும்

என்ற தணியாத ஒரு தாகமுண்டு. இத்தனை பின்னணியிலிருந்து தான் நீ கண்டிக்கப்படுவாய்.

சில நேரம் பெற்றோர் தவறாகக் கண்டித்தால் கூட அதை மன்னித்து மறக்கப்பழகு. நீ அதை நினைவில் வைத்துக் கசந்து கொள்வது உன் அன்புணர்வையும், நன்னடத்தையும் பாதித்து விடும். குற்றத்தை மன்னிப்பது உனக்கு மகிமை. (நீதி. 19:11)

10) பெற்றோர் இரட்சிக்கப்படவில்லை. அவர்களின் வாழ்க்கையிலும் சில தவறுகள் இருக்கிறது என்பதற்காக அவர்கள் நம்மைக் கண்டிக்கக்கூடாது என்பது மிகத்தவறு. மிகத்தவறான செயல்கள் நிறைந்த பெற்றோர் கூட பிள்ளைகளைத் திருத்தவே கண்டிக்கிறார்கள். ஆண்டவர் வேதபாரகரைக் குறித்து, அவர்கள் சொல்வதின்படி செய்யுங்கள். செய்வதின் படி செய்யாதிருங்கள் என்று மத். 23:1-3, 25, 26 சொன்னதை நாம் பின்பற்றலாம்.

11) சில நேரம் எத்தனை தான் கண்டித்தாலும் சிலர் அலட்சியமாகவே இருப்பார்கள். தங்கள் தவறை விட்டு திருந்த மனதில்லாது இருப்பார்கள். தங்கள் தவறை உணர முன் வரமாட்டார்கள். தேவன் கண்டித்த பொழுது காயீன் காட்டிய அலட்சியம் இவர்களுக்கு இருக்கும். இப்படி நீ ஒரு நாளும் இருக்கக்கூடாது.

மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான். கடிந்து கொள்ளுதலை கவனித்து நடக்கிறவனோ விவேகி. (நீதி. 15:5)

அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான். (நீதி. 29:1)

12) பெற்றோர் வியாதிக்காரராகவோ, வயதானவர்களாகவோ கல்வியறிவில் குறைவு பட்டவர்களாகவோ இருந்தால் அவர்களை அநேக வாலிப தம்பி, தங்கையர் அலட்சியம் பண்ணுகிறார்கள். இன்றைக்கு நாம் நமது பெற்றோருக்குச் செய்வதே நாளை நமக்கும் செய்யப்படும் என்பதை ஒருபோதும் மறவாதிருங்கள்.

உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு. உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணாதே. தகப்பனைப் பரியாசம் பண்ணி தாயின் கட்டளையை அசட்டை பண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கிடும். கழுகின் குஞ்சுகள் தின்னும். (நீதி. 30:17)

தம்பி, தங்கையே உன் பெற்றோர் தவறான ஒரு காரியத்தில் ஈடுபடும்படி (உதாரணம்: பிறதெய்வ வணக்கம், வீண் களியாட்டு அஞ்ஞான வழக்கம்) உன்னைக் கண்டிப்பார்களானால் நல்ல ஒரு ஆவிக்குரிய விசுவாசியின் ஆலோசனையை நாடு. பொதுவாக பெற்றோர் நம்மைக் கண்டிக்கும் போது அன்பையும், தாழ்மையும் வெளிப்படுத்துவது நமது நற்சாட்சியாகும். அவர்களை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கும் வழி வகுக்கும்.

கடைசியாக ஒரு வார்த்தை.

"தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்து போம்."

செம்மையானவனோ தன் வழியை நேர்ப்படுத்துகிறான்.

(நீதி. 20:20,21,22).

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெடி : ஜெனி உனக்கு என்னவாயிற்று? மூன்று வாரமா ஞாயிற்றுக்கிழமை ஆலயத்துக்கு நீ வரலையே.

ஜெனி: ஆலயமே எனக்கு வெறுப்பாகிப் போச்சு. அங்கே நடக்கிற தவறான காரியங்களைப் பார்த்தால் யாருக்குத் தான் போக மனசு வரும்.

ஜெடி : ஆலயத்தில் அநீதி நடக்கிறதுனால ஆலயத்துக்குப் போகமாட்டேங்கிறது சரியான வழி அல்ல. நாம் ஆண்டவரை ஆராதிக்கத்தான் ஆலயத்துக்குப் போகிறோம். ஆலய நியமனம் என்பது ஆண்டவரே கொடுத்தது. எனவே அதை அசட்டை பண்ணக்கூடாது.

ஜெனி: ஆண்டவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசம் பண்ணமாட்டார். அப்படின்னு பைபிள்ளேயே சொல்லியிருக்கே.

ஜெடி : ஆண்டவருக்கு ஆலயம் கட்டின சாலமோன், தான் கட்டின ஆலயம் சிறியது என்ற தாழ்மையைத் தெரிவிக்கத் தான் அந்த வசனத்தை சொன்னார். எல்லா இடத்திலேயும் குறையும் இருக்கும் நிறையும் இருக்கும். திரித்துவம், இரட்சிப்பு, இரண்டாம் வருகை, இயேசுவின் கன்னிபிறப்பு, ஆவியினால் நிறைந்த வாழ்வு, ஆத்தும ஆதாயம் இவற்றை நம்புகிற பின்பற்றுகிற எந்த சபையிலும் நாம் அங்கமாகலாம். இப்படிப்பட்ட ஒரு ஆலயத்தில் நாம் கட்டாயம் இணைந்திருக்க வேண்டும். இதிலேயும் நமது சாட்சியை நாம் காத்துக் கொள்ள வேண்டும்.

ஜெனி: நான் என்னமோ நினைச்சுட்டேன் இப்ப நல்லா புரிஞ்சுது ஜெடி!

“உங்களுக்குப் புரிந்ததா . . .

8. தாழ்வு மனப்பான்மையா ...?

என்னைக் குறித்தே ஒரு தாழ்வு மனப்பான்மை எனக்கு இருக்கிறது. இதனால் மகிழ்ச்சியிழந்து பலவித மனக்குழப்பத்தில் தவிக்கிறேன். எனக்கு இதிலிருந்து விடுதலை உண்டா?.

தாழ்வு மனப்பான்மையை குறித்து அமெரிக்க கோடீசுவரரான "ராக்பெல்லர்" ஒரு தடவை இவ்விதமாய் குறிப்பிட்டார். தற்கொலை செய்யப் போகிறவனைக் கூட காப்பாற்றி உயிர் வாழச் செய்து விடலாம். ஆனால் தாழ்வு மனப்பான்மையை கொண்டவனை வாழ வைப்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல.

தாழ்வு மனப்பான்மையின் அகோரத்தைத் தெரிவிக்க அவர் அப்படிக் கூறியிருக்கலாம். தாழ்வு மனப்பான்மையால் (Inferiority Complex) அநேகர் தற்கொலை கூட செய்து கொள்கிறார்கள். தாழ்வு மனப்பான்மை அநேகரை முரட்டாட்டம் பண்ணுகிறவர்களாகவும், சமூக விரோதி களாகவும் கூட மாற்றி விடுகிறது. தாழ்வு மனப்பான்மை வாழ்க்கையைத் தோல்விக்கு நேராக இழுத்துச் செல்வ தோடல்லாமல் ஒவ்வொரு நிமிடமும் அவர்களின் உள்ளத்தையும், உடலையும் பாதிக்கிறது. தாழ்வு மனப்பான்மை தன்னையுடையவர்களின் மகிழ்ச்சியையும் கெடுத்து அவர்கள் இருக்கும் இடங்களில் மற்றவர்களின் மகிழ்ச்சியையும் கெடுத்து பிரச்சனையை உண்டாக்கிக் கொண்டிருக்கும்.

இவ்வளவு தீமையான தாழ்வு மனப்பான்மையையும் ஆண்டவராலே மாற்ற முடியும். (அல்லேலூயா)

இதோ தாழ்வு மனப்பான்மையை மேற்கொள்ள சில நடைமுறை ஆலோசனைகளைத் தருகிறேன்.

1) தன்னைக் குறித்தே தாழ்வாக நினைப்பது தாழ்வு மனப்பான்மையின் ஒரு நிலை. தன்னம்பிக்கையற்று தன் மீதே சந்தேகங்கொண்ட நிலையில் இவர்கள் காணப்படுவர்.

ஆனால் தேவனுடைய பிள்ளையானபின் நாம் விசேஷித்தவர்கள் என்பதை இப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆடு மேய்க்கும் தாவீது, மீன் பிடிக்கும் பேதுரு, குற்றம் சாட்டப்பட்ட யோசேப்பு, அனாதை எஸ்தர் இவர்களையெல்லாம் உயர்த்தியவர் நம் தேவன் என்பதை மறந்துவிடக் கூடாது.

தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிய தன்னையே தாழ்வாக நினைத்துக் கொண்டிருக்காமல் சாதாரணமானவர் களைக் கொண்டு மாபெரும் காரியங்களைச் செய்யும் தேவனை எப்பொழுதும் நினைத்துக்கொள்ள வேண்டும்.

2) தாழ்வு மனப்பான்மையுள்ளவர்களுக்கு மற்றவர்களைக் குறித்த ஒரு பயம் மனதுக்குள் இருந்து கொண்டே இருக்கும். மடியிலே கனமில்லையேல் வழியில் பயமில்லை என்பார்கள். ஆனால் தாழ்வு மனப்பான்மை யுள்ளோரோ மடியிலே கனமில்லா விட்டாலும் பயந்து கொண்டிருப்பர்.

யாராவது தங்களை ஏதாவது சொல்லி விடுவார்களோ தங்கள் பழைய பாவங்களைக் கூறி விடுவார்களோ, தங்களைத்தவறாக ஏதாவது நினைத்துக் கொள்வார்களோ என்றெல்லாம் பயம் எழும்பும். இப்படிப்பட்டவர்கள் தேவனிடத்தில் பாவங்களை அறிக்கையிட்டு விட்டபின் அவை மறக்கப்பட்டு விட்டன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டியிருந்தால், ஒப்புரவாக வேண்டியிருந்தால் தைரியமாக அதைச் செயல்படுத்தி விடவேண்டும். மாறாக ஒளித்து ஒதுங்க முற்படக்கூடாது. மற்றவர்களின்

பாராட்டுக்காக அல்ல தேவனின் மகிமைக்காகவே நாம் செயல்படவேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்மை நாமே குழப்பிக் கொள்ளக் கூடாது. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடுக்கவில்லையே.

3) தாழ்வு மனப்பான்மையுள்ள அநேகர் தங்கள் தோல்விகளையே நினைத்துப் புலம்பிக் கொண்டிருப்பர். இது அவர்கள் தொடர்ந்து செயல்படுவதற்கு தடையுண்டாக்கும்.

"எந்தத் திறமைசாலியும் எப்போதும் வெற்றி பெற்று கொண்டிருப்பதில்லை.

எந்தத் திறமையற்றவனும் எப்போதும் தோற்றுக் கொண்டிருப்பதில்லை." என்று ஒரு உலக அறிஞன் சொன்னான். இது எப்படியோ? தோல்வியை மனதிற்குள் வைத்து புலம்புவது போய்விட்ட பஸ்சை நினைத்து புலம்புவது போலவாம். அடுத்த பஸ் எப்பொழுது வரும் என்று எதிர்பார்ப்பதே நல்வழி. எந்த தோல்வியும் கிறிஸ்துவுக்குள் வெற்றியாக மாற்றப்படும். சிலநேரம் தேவன் தோல்விகளை அனுமதித்தாலும் அது நன்மையாகவே முடியும்.

தேவ மனிதராகிய ஆபிரகாம் லிங்கன் 16க்கும் அதிகமான முறை தோல்விகளையும், ஏமாற்றங்களையும் சந்தித்த பின்பு தான் அவர் அமெரிக்க ஜனாதிபதியானார். ஆண்டவரைச் சார்ந்து கொள்ளுங்கள். தோல்வி வெற்றியின் படிகளாக மாறும்.

4) தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் எப்பொழுதும் திருப்தியற்ற நிலையிலேயே காணப்படுவர். தங்களுக்கு இல்லாத காரியங்களையே நினைத்து நொந்து கொண்டிருப்பர். இப்படிப்பட்டவர்கள் தங்களைவிட அதிகம் கஷ்டப்படுவர்களைச் சற்று நினைத்துப் பார்ப்பது

நல்லது. அது மட்டுமின்றி, தங்களுக்கு உள்ளவை களுக்காக திருப்தியடைந்து ஆண்டவரை ஸ்தோத்தரிக்கவும் பழக வேண்டும்.

எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் என்ற பவுலின் தீர்மானம் பின்பற்றத்தக்கது. சீனாவில் ஒரு பழமொழி உண்டு. "என் கால்களுக்கு செருப்பு இல்லையே என யோசித்துக் கொண்டிருந்தேன். இரண்டு காலுமே இல்லாத ஒரு முடவனைச் சந்திக்கும் வரை" சிந்திப்பீர்களா? திருப்தியாயிருங்கள். தேவனை ஸ்தோத்தரியுங்கள்.

5) தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் எப்பொழுதும் மற்றவர்களோடு தங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே இருப்பர். தங்களைவிட திறமையிலோ, குணத்திலோ மேலானவர்களைப் பார்த்தால் பொறாமை வந்துவிடும். பின்பு குறை கூறல், கோபம், எரிச்சல், பழி வாங்குதல் எல்லாம் தொடர்ந்து வரும். இப்படிப் பட்டவர்கள் முதலாவது மற்றவர்களோடு தங்களை ஒப்பிட்டு பார்ப்பதை நிறுத்த வேண்டும்.

ஒவ்வொருவரும் வேறுபட்ட அழைப்பைப் பெற்றவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எல்லாரும் கண்ணல்ல, எல்லோரும் மூக்கல்ல, எல்லோரும் காதல்ல, அழைப்புகள் வெவ்வேறு. நம்மை விட மேலானவர்களை வெளிப்படையாகப் பாராட்ட வேண்டும். அத்துடன் நமக்கு தேவன் அருளியிருக்கும் தாலந்தில் தேவனைச் சார்ந்து வளர முற்பட வேண்டும்.

6) தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் ஒரு காரியத்தையும் திட மனதோடு முன் வந்து செய்யமாட்டார்கள்.

மற்றவர்கள் செய்யவேண்டும் என நினைப்பார்கள். நம்மால் முடிந்த அத்தனை காரியத்தையும் நாமே செய்யப் பழக வேண்டும். கற்பனையில் மிகக் கடினமாகத் தோன்றும் காரியம் கூட செயல்பட ஆரம்பித்தால் மிக எளிதாக முடிந்து விடும்.

சாக்கு போக்கு கூறுவதை கண்டிப்பாக நிறுத்திவிடுங்கள். எந்தக் காரியத்தையும் ஒத்தி வைப்பதையும், தள்ளி வைப்பதையும் தவிர்ப்பது நல்லது. சிறிய செயல்களில் கூட இதைக் கடைப்பிடிப்பீர்களானால் உங்கள் உள்ளான நிலையில் பெரும் மாற்றத்தை உணருவீர்கள்.

7) தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் எப்பொழுதும் ஒருவித விரக்தியுடன் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வார்கள். உங்கள் தோல்விகளோ, சரீர குறைபாடுகளோ, பெலவீனங்களோ உங்களைக் கசப்பு நிலைக்கு தள்ளாதபடி விழிப்போடிருங்கள்.

தேவனை நேசிக்கப்பழகுங்கள் - தேவன்

உங்களுக்குத் தந்த வாழ்வை நேசிக்கப்பழகுங்கள்

உங்களுடைய குடும்பத்தாரையும், நண்பர்களையும் உண்மையாய் நேசியுங்கள்.

தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிய மிகச் சிறந்த வழி தேவனையும், நம்மையும் மற்றவர்களையும் உண்மையாய் நேசிப்பது தான். ஆடு மேய்க்கும் மேய்ப்பனாக தாழ்வு மனப்பான்மையில் போராடிய மோசேயைத் தேவன் மாபெரும் தலைவனாக மாற்றியதை மறவாதிருங்கள்.

சரீர பெலவீனமும், மிகக் கடுமையான எதிர்ப்புகளும் இருந்தாலும் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்ற பவுலின் முழக்கம் உங்கள் உள்ளங்களிலே பதிக்கப்படட்டும் . (பிலிப். 4:13)

9. காதலிக்கலாமா...?

இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் காதலிக்கலாமா? காதல் திருமணங்களில் ஜாதி பிரச்சனையை ஒழிக்கலாம். வரதட்சனை கொடுமையைக் கூட மாற்றலாமே.

அந்தக் காலத்தில் காதல் என்பதே இல்லை என்பது போல நடந்து கொண்டார்கள். இந்தக்காலத்தில் காதலைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்பது போல் நடந்து கொள்கிறார்கள் என்றார் ஒரு தமிழ் எழுத்தாளர். அந்தக் காலத்தில் கண்டதும் காதல் என்பார்கள். இந்தக்காலத்தில் கண்டதெல்லாம் காதலாகிவிட்டது என்றார் இன்னொருவர். காதலில் விழுந்து விட்டால் விலாப்புறத்தில் குத்தும் முள்ளை வைத்திருக்கிறோம் என்று பொருள் என்றார் ஒரு அறிஞர்.

எது எப்படியோ, காதல் போன்ற சமாச்சாரங்களுக்கு வாலிப தம்பி தங்கையர் விலகியிருப்பதே நலமானது ஏனெனில் . . .

1) அதிகமான காதல் நிகழ்வுள் திருமணத்தில் முடிவதில்லை. முடிவடைந்த காதல் திருமணங்களும் தோல்வியிலேயே மோதிக் கொண்டிருக்கின்றன. இங்கிலாந்து அரச குடும்பம் முதல் இவ்விஷயத்தில் தள்ளாடித் தவிப்பது நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய ஒன்று.

2) காதலில் விழுவோரின் சிந்தை அதிலேயே ஆக்கிரமிக்கப் பட்டு விடுகிறது. இதினிமித்தம் படிப்பில் வேலையில் ஆவிக்குரிய காரியங்களில் ஒரு மனதோடு ஈடுபட முடியாதபடி அநேகர் தவிக்கிறார்கள். உன் சிந்தையில் முதலிடம் பெற வேண்டிய இயேசு கிறிஸ்துவுக்குப்

பதிலாக வேறொரு நபரைக் கொண்டு வந்து வைப்பது மறைமுக விக்கிரக ஆராதனையல்லவா? ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். (ரோமர் 8:5)

3) காதல் போன்ற காரியங்கள் உன்னை மாய்மாலம் செய்யும் நபராக மாற்றிவிடும். உன் காதலை மறைப்பதற்காக நீ போடும் வேஷங்கள் அள்ளித்தூவும் பொய்கள், பெற்றோரை, பெரியோரை ஏமாற்றும் சாக்குப் போக்குகள் இப்படியெல்லாம் நடந்து விட்டு தேவாசீர்வாதத்துக்கு பாத்திரமான நபராக நீ எப்படி வாழ முடியும்?

உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்காதே என்கிறார் பவுல். (ரோமர் 12:1)

வேஷமாக வாழ்பவனுக்கு சஞ்சலமுண்டு என்கிறார் தாவீது. (சங். 39:6) எனவே காதல் காரியங்களுக்கு விலகியோடு.

4) இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு நபர் காதலில் விழுவது நற்சாட்சிக்கு இடறலாகவே அமையும். கடிதப்பரிமாற்றம், இரகசிய சந்திப்புகள், தவறான பார்வை, சிரிப்பு இவையெல்லாம் உங்கள் சாட்சியைக் குலைத்துவிடுமே. விசுவாசியின் ஒவ்வொரு செயலிலும் தேவன் மகிமைப்பட வேண்டும். ஆனால் காதல் சமாச்சாரங்கள் நீ தேவனை மகிமைப்படுத்த தடையாக இருப்பதுவுமன்றி தேவ நாம மகிமையைக் குலைச்ச லாக்கவும் வழிவகுத்து வருகிறது. (ரோமர் 2:24, ரோமர் 14:16, 1 கொரி 6:20, 10:31)

5) இந்திய அரசு சட்டப்படி பெண்ணுக்கு 18 வயதும் ஆணுக்கு 21 வயதுக்குப் பின்பே திருமணம் நடத்தப்பட

வேண்டும். இப்படி இருக்க படிக்கிற வயதில் காதல் என்பது அரசாங்க சட்டப்படி கூட தவறாகும். அப்படியானால் டீன்ஏஜ் வயதுக்குப் பின், படிப்பு முடிந்தவுடன் காதலிக்கலாமா? என நீ கேட்கலாம். தேவ மனிதர் ஒருவர் சொன்ன வார்த்தையை உனக்கு நினைவுபடுத்துகிறேன். டீன்ஏஜ் வயதில் காதலில் விழுவது குருடன் வழி தெரியாமல் குழியில் விழுவது போன்றது. டீன்ஏஜ் வயது கடந்த காதலில் விழுவது யானை தன் தலையிலே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போன்றது சிந்திப்பீர்களா?

விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்கிறான். (நீதி.22:3)

6) திருமணம் என்பது ஆண் மற்றும் பெண் மட்டும் தொடர்புடைய விஷயம் மட்டுமல்ல, தேவனும் சம்பந்தப்பட வேண்டிய விஷயம். அதுவும் விசுவாசியின் திருமணத்தில் தேவனுடைய பெரிய திட்டங்கள் நிறைவேற வேண்டுமே.

மாறாகக் காதலிலோ, தேவனும் தேவசித்தமும் புறக்கணிக்கப் பட்டு, கவர்ச்சி, சூழ்நிலை, சந்தர்ப்பம், மாம்சீகத்திட்டம், குறுக்கு வழி இவையே இடம் பெறுகின்றன. தேவன் உனக்காக வைத்திருக்கும் மகிமையான திட்டங்களைஅவசரப்பட்டு நீயே கெடுத்துக் கொள்ளாதே. உன்னைவிட உன் எதிர்காலத்தைக் குறித்து தேவனுக்கு அக்கறையுண்டு. மறவாதே.

7) இந்த உலகம் காதல், வன்முறை இரண்டினாலும் தான் சீரழிந்து கொண்டிருக்கிறது. இவற்றிலிருந்து இயேசுக் கிறிஸ்துவின் மகிமையான வாழ்வுக்குப் பிரித்தெடுத்து அழைக்கப்பட்டவன் நீ. இன்றைய சினிமா, கட்டுக்கதைகள் அனைத்தின் மையமும் காதலும் வன்முறையும் தான். இது உனது வாழ்விலும் மையமாக

வேண்டாம். வன்முறையை நீ புறக்கணிக்கிற அளவுக்கு காதல் விவகாரங்களையும் தவிர்க்க வேண்டும். இப்படியொரு வழக்கத்தில் நீ சிக்கியிருந்தால் உன் தவறான தொடர்பை துண்டித்துப்போடு. தேவனிடத்தில் முழுமையாக அர்ப்பணித்து பரிசுத்தமுள்ள புதிய மனுஷனாக, புதிய மனுஷியாக கெம்பீரமாக வாழத்தொடங்கு.

மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள். (அப். 2:40)

8) டீன்ஏஜ் வயது அன்புக்காக ஏங்கும் பருவம். இப்பருவத்தில், தங்கள் தவறுகளை யாராவது சுட்டிக் காட்டினால் கூட அவர்கள் மீது வெறுப்பு வரும். யாராவது தங்களைப் புகழ்ந்து விட்டால் அவர்கள் மீது சொல்லி முடியாத ஒரு பற்று வரும். இப்பருவத்தில் அநேகம் பெண்கள் தங்களைப் புகழும் வஞ்சகமான வாலிபர் வலையில் விழுந்து விடுகிறார்கள்.

சீகேம் ஊரில் சீகேம் என்ற வாலிபனிடம் சீர்கெட்டுப் போன தீனாள் எவ்வளவாய் நஷ்டப்பட்டாள்.

(ஆதி 34:1-26)

நம்மைக் கண்டிப்போரெல்லாம் அன்பற்றவர்களல்லர். நம்மை புகழ்வோரெல்லாம் அன்புடையோர் அல்லர். விழிப்புணர்வோடு நடந்து கொள்வது நல்லது. முள்ளில் சேலை விழுந்தாலும், சேலையில் முள் விழுந்தாலும் கிழிவது சேலை தான். ஒரு நாளும் மறவாதே விவேகி தன் நடையின் மேல் கவனமாயிருக்கிறான். *(நீதி. 14:15)

9) காதல் என்பது விசுவாசியை வீழ்த்தும் சாத்தானுடைய கண்ணி என்றார் ஒருவர். பார்வையில் விழுந்து சிரிப்பில் மலர்ந்து பரிசுகள் பரிமாறி, கடிதத்தில் வளர்ந்து கடைசியில் தவறான காரியங்களில் பலியாகி கண்ணீரின்

கதைகள், தோல்வியடைந்தால் தற்கொலைகள், சோகம் படிந்த பார்வை; சிலருக்கு சவரம் பண்ணாத முகங்கள்; (சில நேரத்தில் முகத்தில் குறுந்தாடிகள்) ஆன்மீகப் பின்மாற்றங்கள்; குடும்பங்களுக்கு அவமானங்கள், பெரியோர்களுக்கு வேதனைகள் இவையெல்லாம் தேவைதானா?

தேவன் குழப்பத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். (1 கொரி 14:33)

10) காதல் மூலம் வரதட்சணையை ஒழிக்கலாம். ஜாதி பேதத்தை மாற்றலாம். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளலாம் என்று பலவித தத்துவங்களை பலர் உதிர்ப்பதுண்டு. இது நெருப்புக்குத் தப்ப விரும்பிய ஒருவன் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பது போல இருக்கிறது.

வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான் (நீதி. 26:17) என்றார் ஞானியாகிய சாலமோன்.

விசுவாசிகளைப் பொறுத்த வரையில் காதல் விவகாரம் என்பது நாய்க்காதைப் பிடித்து இழுப்பதைப் போன்றது தான்.

கடிபட்டால் சில நேரம் அந்தவடு வாழ்நாள் முழுவதும் மாறாமலே இருக்கும்.

(காதலிக்கலாமா? என்றா கேட்கிறாய் - ஏன் உனக்கு நிம்மதியோடிருக்க விருப்பமில்லையா?)

உன் இதய பெலவீனத்தை ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவிடம் சொல். காதல் விவகாரங்களுக்கு விலகியோட அவர் உனக்கு உதவி செய்வார். (எபி. 2:18)

தேவனால் பிறந்த எவனும் தன்னைக் காக்கிறான்.

(1 யோவான் 5:18)

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெனி : ஜெடி நான் 40 நாள் Fasting இருக்கப்போறேன்.

ஜெடி : ஏன் திடீர்னு என்ன விஷயம்?

ஜெனி : போனவாரம் ஒரு அம்மா எழுதின புஸ்தகத்தைப் பார்த்தேன். அவங்க 40 நாள் Fasting இருந்து ஜெபம் பண்ணினாங்களாம். நெறையா வரமெல்லாம் கிடைத்ததாம். எனக்கும் அந்த மாதிரி வரம் கெடைச்சா சீக்கிரம் Famous ஆகிறலாமே. பெரிய அளவுல ஊழியம் கூட செய்யலாமே.

ஜெடி : ஜெனி Famous ஆகிறதுக்காக ஆண்டவர்கிட்ட வரம் கேட்டா அது தவறான காரியம். நமக்குத் தேவை ஊழிய பாரம் அல்ல. ஆத்தும பாரம். ஆவியானவரை நாம் பயன்படுத்தனும்னு நினைக்கக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பயன்படுத்த நாம் ஒப்புக் கொடுக்கணும்.

ஜெனி : அப்ப வரத்துக்காக ஜெபம் பண்ணக்கூடாதா?

ஜெடி : தாராளமாய் ஜெபம் பண்ணலாம். அத்தோடு ஆவிக்குரிய கனிகளும் நமக்கு ரொம்ப அவசியம். வரமிருந்தும் கனியில்லனா நாம பரலோகம் போக முடியாது. ஆண்டவர்கிட்ட கனியுள்ள வாழ்க்கை வாழ பெலத்தைக்கேளு. தாகத்தோடு வரத்தையும் கேளு. ஆண்டவர் தனக்குச் சித்தமான விதத்தில் உன்னைப் பயன்படுத்துவாரு.

ஜெனி : இப்ப எனக்கு நல்லா புரிஞ்சுது ஜெடி!

"உங்களுக்குப் புரிந்ததா"

10. தவறான சிந்தனையா?

நான் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின் அசுத்த சிந்தனையே வராது என நினைத்தேன். ஆனால் எனக்கு இன்னும் அசுத்த சிந்தனைகள் வருகிறது. இதினிமித்தம் மிக அதிகமாக பாதிக்கப்படுகிறேன். இதிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்குமா?

தவறான சிந்தனையினால் தடம்புரண்டு போன வாழ்க்கைக் கதைகள் பலவுண்டு. இறங்கு முகமான சிந்தனையைச் சிந்தித்து ஏறுமுகமாக மலையில் ஏற முடியாது என்றார், ஹுஸ்டைன் என்னும் பெரியார். தவறான சிந்தனை தவறான வழிகளுக்கு நம்மை தூண்டி விடுவதால் அது தடுக்கப்பட வேண்டியதே. தவறான சிந்தனையில் நிலைத்திருக்கும் ஒருவர் எதிர்பாலரைச் சந்திக்கும் போது சரியான கண்ணோட்டத் தோடு பார்க்க முடியாது. எனவே இது தடை கட்டப்பட வேண்டிய விஷயமே. எண்ணங்களே மனிதனை உருவாக்கு கின்றன. எனவே எண்ணங்களைச் சரிபடுத்துவது அவசியமான காரியம். இதைக் குறித்த சில உண்மைகளைக் கவனிப்போம்.

1) இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால், திருமண மாகிவிட்டால், வயதாகிவிட்டால், வேதம் வாசித்தால், தவறான சிந்தனை வராது எனப் பலரும் நினைக்கிறார்கள். இது தவறான கணிப்பு. மனிதன் மரிக்கிற வரை தீய சிந்தனை அவனைத் தாக்கிக் கொண்டு தான் இருக்கும். தீய சிந்தனை வருவது பாவமில்லை. அதை திட மனதோடு எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டு அதில் விழுந்து விடுவது தான் பாவம். தீய சிந்தனை அனுபவிக்கத்தகாத சிற்றின்பங்களை அனுபவிக்கத் தூண்டி விடும் சாத்தானின் ஆயுதமாகும். எனவே தீய சிந்தனையில் மகிழ்ந்திருப்பது சாத்தானுக்கும் பாவத்திற்கும் சம்மதம் தெரிவிப்பது போலாகும். எனவே தேவனுடைய

பிள்ளைகள் தீய சிந்தனைக்கு எதிர்த்து நிற்க வேண்டும். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். (யாக். 4:7)

2) யாருக்கும் தெரியாமல் தீய சிந்தனையில் கொஞ்ச நேரம் மகிழ்ந்திருக்கலாம் என சிலர் நினைக்கிறார்கள். உலகம் செயலை மட்டும் பார்க்கிறது தேவனோ சிந்தனையையும் பார்க்கிறார் என்பதை நாம் அழுத்தமாக உணர்ந்து கொள்ள வேண்டும். தீய சிந்தனை நமது செய்லகளைத் திட்டவட்டமாகப் பாதிக்கக் கூடியவை. இடிமுழக்கத்துக்கு முன் மின்னல் வருவது போல் செயலுக்கு முன் சிந்தனை வருகிறது என்றார் ஒருவர்.

தீய சிந்தனையை வளரவிட்டால் அதை நாம் மேற்கொள்ளவே முடியாது. அது வந்தவுடனேயே அதை தகர்த்தெறிவது சிறப்பானது. பறவைகள் நம் தலைக்கு மேல் பறப்பதை தடுக்க முடியாது. ஆனால் தலையிலிறங்கி கூடு கட்டுவதை தடுக்கலாமே. இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். எனவே தவறான சிந்தனையை ஆரம்பத்திலேயே அகற்றப்பழகுங்கள்.

3) ஜெபிக்கிறவன் பாவம் செய்வதை நிறுத்துவான் என்றார் ஒருவர். தீய சிந்தனையை மேற்கொள்ள உடனடியாக ஜெபிப்பது மிகவும் பயனுள்ளது. தவறான சிந்தனையை மேற்கொள்ள ஆண்டவரிடத்தில் பெலன் கேட்டு ஜெபிக்கலாம். நமது சிந்தனையில் நம்மை வீழ்த்தும்படி சாத்தான் நினைவுபடுத்தும் நபரின் இரட்சிப்புக்காக, ஆன்மீக ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கலாம். நம்மைப் போல தீய சிந்தனையினால் பாதிக்கப்படும் ஒவ்வொரு நபருக்காகவும் பாரத்தோடு ஜெபிக்கலாம். தீயசிந்தனை வளருகிறதா? உடனடியாக ஜெபிக்க ஆரம்பி.

தேவனே நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன். எனக்குச் செவி கொடுக்கிறீர். (மத். 26:41) (சங். 17:6)

4) இயேசு இரட்சகருக்கும் தவறான சிந்தனைகளைச் சாத்தான் தூண்டி விட்டான். இயேசு கிறிஸ்து வேத வசனங்கள் மூலமாக ஜெயம் பெற்றார். (மத். 4:8-10)

ஆவியின் பட்டயமாகிய வேத வசனங்களை வாசித்து தியானிப்பதின் மூலம் தீய சிந்தனையை ஜெயிக்கலாம். அதிகாலை வேதாகம தியானம், இரவிலே தூக்கம் வரும் வரை புதிய ஏற்பாட்டை வாசித்துக் கொண்டிருப்பதும் வேத வசனங்களைத் தியானித்துக் கொண்டிருப்பதும் மிகவும் உன்னதமானதும், மகிழ்ச்சி கரமானதுமான அனுபவமாகும். இது தீய சிந்தனையை மேற்கொள்ள வழி வகுக்கும்.

நான் உமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். (சங். 119:11,9) (நீதி. 6:20-26)

5) இருயத்தின் வாசல் கண்ணாகும். கண்ணுக்கு கட்டுப்பாடு வைத்தால் தீய சிந்தனையை மேற்கொள்வது எளிதாகும். கண்களோடு உடன்படிக்கை பண்ணின நான் ஒரு ஸ்திரீயின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி என்கிறார் யோபு. (யோபு 31:1) கண்ணுக்கு அழகு என்று தான் சிம்சோனும் அழைப்பை மறந்து அவமானத்தைக் கண்டான். (நியா. 14:3)

உன் இதய சிந்தனையைக் கெடுக்கும் எதையும் பார்க்காதபடி இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொள். தவறான சில இடங்களில் சில நபர்கள், சில காட்சிகள், சில விளம்பரங்கள். சில உரையாடல்கள், இவற்றை விட்டு விலகி ஓடு. உன் கண்ணைக் காத்துக்கொண்டால் உன் இருதயத்தைக் காத்துக் கொள்ளலாம். உன் இருதயத்தைக் காத்துக்கொண்டால் அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். (நீதி. 4:23)

சோம்பேறியின் இதயம் பிசாசின் தொழிற்சாலை எனலாம். ஏதாவது நல்ல காரியங்களில் நாட்டம் செலுத்துவது தீய சிந்தனையை மேற்கொள்ள உதவும். கதவு கீழ் முனையில் ஆடிக்கொண்டிருப்பது போல சோம்பேறித்தனமாக படுக்கையில் இருக்காதே. (நீதி. 26:14) நல்ல உள்ளம் படைத்த பெரியோர்களுடன் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பது இதய எண்ணங்களைச் சீர்ப்படுத்தும். நல்லப் புத்தகங்களை படிப்பது, உடற்பயிற்சி ஆவிக்குரிய காரியங்களில் ஒழுங்கான ஈடுபாடு, நல்ல பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடல் இவையெல்லாம் தீய சிந்தனைகளை மேற்கொள்ள உதவும் எளிய வழிகள்.

7) தீய சிந்தனைகள் சரீரத்தில் இச்சையான உணர்ச்சிகளைத் தூண்டிவிடும். சிலநேரம் சரீரத்தில் எழும் இச்சை யுணர்வுகள் தீய சிந்தனையைத் தூண்டி விடும். எனவே தீய சிந்தனைகளைக் கட்டுப்படுத்தப் பழகி கொண்டால் சரீர உணர்வுகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மிக எளிதான காரியமாகி விடும். ஒருமுறை தீய சிந்தனை வரும் போது இந்த முறை இதை எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்ற திட்டத் தோடு செயல்படுங்கள். ஒரு முறை ஜெயித்து விட்டால் ஒவ்வொரு முறையும் ஜெயிப்பது சாத்தியமே. தீய சிந்தனையால் வரும் மகிழ்ச்சி, குற்ற உணர்வையும் வெட்கத்தையும், தாழ்வு மனப்பான்மையையும், குழப்பத்தையும் தரும்.

தீய சிந்தனையை ஜெயிப்பதால் வரும் மகிழ்ச்சியில் கெம்பீரமும், திடமும், தைரியமும், தெளிவும், முன்னேற்ற சிந்தனையும் உண்டு. "நல்ல வழி எங்கே என்று பார்த்து அவைகளிலே நடவுங்கள்" (எரே. 6:16).

நல்லா புரிஞ்சுதா ஜெனி?

ஜெடி : என்ன ஜெனி உனக்கு ரொம்ப கலையா?

ஜெனி: இல்லையே ரொம்ப சந்தோஷமாகத்தான் இருக்கேன்.

ஜெடி : பிறகு ஏன் சோகமாக ஒரு கவிதை எழுதி வச்சிருக்க. வேறொரு கவிதையும் இருந்திச்சு. அது கையெழுத்து வேற மாதிரி இருக்கே.

ஜெனி: அதுவா எதிர்வீட்டு பையன் ஜெவ்ரன் எழுதின கவிதை. அவனுக்கு என் கவிதைன்னா ரொம்பப்பிடிக்கும்.

ஜெடி : ஓஹோ நேத்து Sunday Class முடிந்தவுடனேயே அரை மணி நேரத்துக்கும் மேல பேசிக் கிட்டிருந்தியே – அந்தப் பையனா?

ஜெனி: ஏன் பையன்களோடு பேசக்கூடாதா?

ஜெடி : தாராளமாய்ப் பேசலாம். ஆனால் எதிர்பாலரோடு பேசும் போது நம்ம அளவோடு தான் இருக்கனும். ஏதோ சோகமாக இருக்கிற மாதிரி நீ ஒரு கவிதை எழுதிக் கொடுக்க அவனும் ஒரு கவிதை எழுத கடைசியில் சாத்தானுடைய வலையில் நாம சிக்கிறக்கூடாது. எதிர் பாலர்கிட்ட பேசினாலும் இடறலில்லாத முறையில் நாம் நடந்துக்கனும். இந்தா வாலிபத்தின் கேள்விகள்னு இந்த புஸ்தகத்துல நெறைய ஆலோசனை இருக்கு படிச்சுப்பாரு.

ஜெனி: நீ சொல்றது சரிதான். ஜெடி ஆண்டவர் எனக்கும் உணர்த்தினார். இப்ப எனக்கு நல்லா புரிஞ்சுது ஜெடி!

“உங்களுக்குப் புரிந்ததா?”

11. இச்சை படுத்தும் பாடு...?

மாம்ச இச்சைகளினால் அடிக்கடி சோதிக்கப் படுகிறேன். இதை மேற்கொண்டு பாவத்தில் விழாதிருப்பது எப்படி?

இன்றைய உலகில் பெரும்பாலான வாலிபர்கள் சரீர இச்சையோடு போராடிக் கொண்டு தான் இருக்கிறார்கள். இதைக் குறித்த தெளிவான உண்மைகள் தெரியாமல் உலகம் திசைமாறித் தடுமாறுகிறது. இளமைப் பருவத்தின் போது பாலுறவு தொடர்பான ஆசைகள் மனிதனுக்கு ஏற்படுகின்றன. இனவிருத்தி தொடர்பான ஆசைகள் மனிதனுக்கு ஏற்படுகின்றன. இனவிருத்தி உண்டாகக்கூடிய சுரப்பு நீர்கள் விடுவிக்கப்படுகின்றன. இருபாலருக்கு இது இயல்பான பிரதிபலிப்பே. பாலுணர்வை இருபாலருக்கும் படைத்தது தேவனே. எனவே நாம் இதைப்பற்றி குற்ற உணர்வு கொள்ள வேண்டிய் அவசியமில்லை. ஆனால் தேவன் படைத்த பாலுணர்வைக் கேலிப் பொருளாக்குவதோ, ஆபாசமாக்கு வதோ, குறுக்கு வழியில் அதை தீர்த்துக் கொள்ள முற்படுவதோ பெரும் பாதக பாவங்களாகும். மாம்ச இச்சைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து கர்த்தருக்குள் வாழும்படி சில குறிப்புகளை வரிசைப்படுத்துகிறேன்.

1) நாம் மகிழ்ச்சியாயிருப்பது தேவனுடைய விருப்பம். ஆனால் அதை நாம் தவறான முறையில் அடைவதைத் தேவன் வெறுக்கிறார். திருமண ஒழுங்கு தேவனால் நியமிக்கப்பட்ட ஒன்று. குறுக்கு வழிகளைச் சாத்தான் தூண்டுவதுண்டு. இவ்வித குறுக்கு வழிகள் தேவனுக்கு விரோதமானவை என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். சில குறுக்கு வழிகள் வருமாறு. சுயபுணர்ச்சி (1 கொரி 6:9) இச்சைகளோடு பார்த்தல் (மத். 5:28) ஆண் புணர்ச்சி (ரோமர் 1:28) விபச்சாரம் (நீதி. 6:32) இவை போன்றவை.

2) இச்சையான காரியங்களில் ஈடுபட்டால் அது உடல் நிலையைப் பாதிக்கும். (நீதி. 5:11) மனநிலையையும் பாதிக்கும் இத்துடன் பிற்கால குடும்ப வாழ்க்கையையும் பாதிக்கும். எனவே இச்சைகளுக்குரிய நபர்களையும் இடங்களையும் விட்டு விலகியோடுவதே சாலச்சிறந்தது.

பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு (2 தீமோ. 2:22)

3) தீய சிந்தனைகளும் இச்சைகளைத் தூண்டி விடுவதுண்டு. இச்சை மனப்பான்மை எதிர்பாலரை பாலுணர்வு சம்பந்தப்பட்ட கருவிகளாகவே பார்க்கத் தூண்டும். எனவே இச்சை எண்ணங்களை பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து துவக்கத்திலேயே மேற் கொள்வது நன்று. மற்றவர்களுக்கு பாதிப்பில்லாமல் இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என நினைத்தால் அது நம்மையும் அதிகமாக பாதிக்கும்.

தேவனோடுள்ள உள்ள உறவையும் பாதிக்கும்.

4) இச்சைகளை மேற்கொள்வதற்கு உபவாசித்து ஜெபித்தல் மிகச் சிறந்த வழி. சரீரம் ஒடுக்கப்படும் போது இச்சைகள் அடங்கிப் போகின்றன. நீ போஜனப்பிரியனானால் உன் தொண்டையில் கத்தியை வை. (நீதி 23;2)

5) இரவில் அதிக கண்விழிப்புக்கூடாது. கண்விழிப்பு உடல் உஷ்ணத்தைத் தூண்டும். உடல் உஷ்ணம் தீய சிந்தனையைத் தூண்டும். தீய சிந்தனை சரீர இச்சைகளைத் தூண்டும். எதிர்பாலார் எவ்வளவு நெருங்கிய உறவினர்களாயிருந்தாலும் ஒருவரை யொருவர் தொட்டுப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். பஞ்சும், நெருப்பும் சரியான இடைவெளியிருந்தால் அழிவில்லை. பழைய பாவ சின்னங்களைப் பேணி வைக்காமல் முற்றிலும் அழித்து விட வேண்டும். எதிர் பாலாரைச் சகோதர சகோதரிகளாகக் கருத வேண்டும்.

6) உடற்கூறு வல்லுனர்களும் மனநிலை மருத்துவர்களும் இச்சைகளை மேற்கொள்ள சில காரியங்களைக் குறிப்பிடுகிறார்கள். அவை

a) தூய்மையான ஆடைகளை அணிய வேண்டும். சுத்தமான காற்றோட்டமுள்ள அறையில் தூங்க வேண்டும்.

b) எப்போதும் ஒருக்களித்தே படுத்துப்பழக வேண்டும்.

c) சாப்பிட்டவுடன் படுக்கைக்கு செல்லக்கூடாது. ஒவ்வொரு நாளும் நன்கு தண்ணீர் குடிக்க வேண்டும்.

d) குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.

e) உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்.

7) எப்போதும் விளைவுகளைச் சிந்திக்கப்பழக வேண்டும். ஒரு நாள் வாழ்வுக்காக முழு வாழ்க்கையையுமே கெடுத்துக் கொள்ளக்கூடாது. இதோ விளைவுகளைச் சிந்திக்காமல் . . . விழுந்து நெளிந்த சிலர் . . .

- ரூபனின் இச்சை தன் தகப்பனின் மறுமனையாட்டிகளையே தீதாய் நடத்தும்படி தூண்டியது, விளைவு மூத்த மகனுக்குரிய அரச பதவி, சேஷ்டபுத்திர பாகம், ஊழியம் மூன்றும் கிடைக்காமல் போயிற்று. (ஆதி. 35:22, 49:3,4)

ஆமாம் இச்சை அதிகமான இழப்பில் உன்னை நிறுத்தும்.

- நியாதிபதியாகிய சிம்சோனின் இச்சை தவறான நபர்களோடு அவனை உறவாட வைத்தது. விளைவு ஜனங்கள் நடுவில் வேடிக்கை காட்டும் நபரானான். (நியா. 15:1,25)

ஆமாம் இச்சை உன்னை வேடிக்கை பொருளாக்கி விடும்.

- தாவீதின் இச்சை பிறனுடைய மனைவியை கவர்ந்து கொள்ளும் படி அவனைத் தூண்டியது. இதன் விளைவு தாவீதின்

குடும்பத்திலும், இச்சையான காரியங்கள் கொலைச் சம்பவங்கள். (II சாமு. 11:1-4, 12:11-14)

ஆமாம் இச்சையின் விளைவுகள் உனது குடும்பத்தையும் கண்ணீரின் பள்ளத்தாக்கில் கவிழ்த்து விடும்.

- அம்னோனின் இச்சை தனக்கு சகோதரி முறைவரும் பெண்ணிடமே தவறு செய்ய வைத்தது. அதன் விளைவு அவன் எதிர்பாராத விதத்தில் அவனுக்கு அழிவு வந்தது? (II சாமு.13:1-30)

ஆம் இச்சை எதிர்பாராத விதத்தில் உன்னை அழிவில் நிறுத்தி விடும்.

- சமாரியா ஸ்திரீயின் இச்சை அவளை விபச்சாரம் நிறைந்த வாழ்வுக்கு தள்ளிவிட்டதால், விளைவு எல்லோராலும் தள்ளி வைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டாள். (யோவான் 4:18)

ஆம் இச்சை தனிமையின் கோரப்பிடிக்குள் நம்மைக் கொண்டு போய்விடும்.

கட்டுப்படுத்தப்பட்ட இச்சை அடுப்பில் இருக்கும் தீ அது பயன்படும். கட்டுப்படுத்தப்படாத இச்சை அது கூரையில் தீ. அது அழித்து விடும். இச்சைகளுக்கு உங்களை ஒப்புக்கொடுக்காமல் எதிர்த்துப் போராடுங்கள். சில தோல்விகள் முடிவுகளல்ல. தொடர்ந்து போராடுங்கள். பரிசுத்த ஆவியானவர் நீங்கள் வெற்றி பெற உதவி செய்தார்.

"சாகத்துணிகையில் சமுத்திரமெம்மட்டு
மாயையே - இந்தத்
தேகம் பொய்யென்றுணர் தீரரை
என் செய்வாய் - மாயையே?"

ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். (ரோமர் 8:13)

வளமுடன் வாழ வாழ்த்தி முடிக்கிறேன். வாழ்க.

உங்களுக்கோர் அழைப்பு . . .

ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களுக்கு ஆசீர்வாதமளிக்கும் ஆவிக்குரிய புத்தகங்கள் வெளியிட ஜெபத்துடன் உதவி செய்யுங்கள்

தலா 5000/– கொடுக்கும் மூன்று குடும்பங்கள் மூலம் ஒரு புத்தகம் வெளியிடுகிறோம். ஒருபுத்தகம் வெளியிட பகுதி செலவான ரூ. 5000/– அல்லது 10000/–மோ, அல்லது முழுதொகையான ரூ. 15,000/–மோ கொடுத்து நீங்கள் உதவலாம். இது ஒரு மகிமையான ஊழியமுமாகும். கடைசி நாட்களில் கர்த்தருக்காக, உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்காக, பல ஆயிரங்கள் ஆசீர்வதிக்கப்பட இந்த உதவியைச் செய்ய முன் வாருங்கள். உங்களால் இயன்ற நன்கொடைகளையும் அனுப்பி இந்த ஊழியத்தைத் தாங்குங்கள்.

– எல்லாம் கடந்து போகும்.

– இயேசு மகா இராஜாவுக்காக செய்வது மட்டும் என்றும் நிலை நிற்கும்.

– இப்புத்தகத்தின் மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதத்தை எங்களுக்கு மறவாமல் எழுதுங்கள். பிறருக்கும் இப்புத்தகத்தை அறிமுகப்படுத்துங்கள்.

– **உங்கள் பகுதியில் எங்களை ஊழியங்களுக்கு அழைக்க விரும்பினாலும் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.**

எங்கள் முகவரி :- **J.J. குருசிங்**

மிஸ்பா நிவாஸ்

பிளாட் எண் : 129, சி.எஸ்.ஐ. நியூ சர்ச் அருகில்,
டக்கரம்மாள்புரம், பெருமாள்புரம் (Po) திருநெல்வேலி–627007.
செல் : 9443373026

அச்சிட்டோர். . . . டிவைன் ஆப்செட், திசையன்விளை. ✆ 272832